# தமிழர்களின் திணைக் கோட்பாடுகள்

## 4.1 தமிழகத்தின் தாவரங்களும் விலங்குகளும்

### 4.1.1 தாவரங்கள் (அ) நிலைத்திணை

தாவரம் அல்லது நிலைத்திணை என்பது மரம், செடி, கொடி, புற்கள் போன்றவற்றைக் குறிக்கும் ஒரு பெரும் உயிரினப் பிரிவாகும். இவ்வகை உயிரினங்கள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு தானே நகராமல் இருப்பதால் இவைகளை நிலைத்திணை என கூறப்படுகிறது.

தமிழகத்தில் இதுவரை சுமார் 3,50,000 தாவர வகைகள் உள்ளதாக மதிப்பிடப்படுகின்றது. இவற்றுள் 2,87,655 இனங்கள் வரை அடையாளம் காணப்பட்டுள்ளன.

#### தாவரத்தின் முக்கியத்துவம்

நீர், மண், காற்று, வெப்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய உயிரோட்டமுள்ள பாரம்பரிய செல்களின் பிரதிபலிப்பு வடிவமாக தாவரங்கள் திகழ்கின்றன. ஒரு செல் உயிரினத்திலிருந்து கடைசி இனமான மனித இனம் வரை நீரையும், காற்றையும், வெப்பத்தையும் வெளியிலிருந்து எடுத்துக்கொண்டு நமது உடல் வளர்ச்சிக்கு தேவையான ஆற்றலையும் பெற்று ஒரு உருவத்துடன் இருப்பது இத்தாவரத்தால்தான். தாவரங்கள் இல்லையெனில் மற்ற உயிரினங்கள் இவ்வுலகில் இல்லை என்பது உண்மை.

மனிதனின் தினசரி தேவைகளான உணவு, தங்குமிடம், மருந்து போன்ற பொருட்களில் தாவரங்களின் பங்கு முக்கியமானது. இன்றைய அறிவியல் வளர்ச்சியடைந்த நிலையிலும் மனிதன் உருவாக்கும் எந்த ஒரு பொருளும் இயற்கையிலிருந்துதான் பெறப்படுகிறது. தாவரங்கள் அடர்ந்த பகுதியில்தான் அதிக மழை கிடைக்கின்றது.

## வரலாற்றில் (அ) சங்ககாலத்தில் தாவரங்கள்

2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த குமட்டூர் கண்ணனார் எழுதிய பதிற்றுப்பத்து பாடல்கள் மூலமும், 1000 ஆண்டுகளுக்கு முன் கம்பர் எழுதிய இராமாயணத்திலும், தாவரங்களின் மூலம் அளித்த உவமைகளிலிருந்து அக்காலத்தில் தாவரங்களுக்கு அளித்த முக்கியத்துவத்தை உணர முடிகிறது.

## தாவரங்களே தெய்வங்களின் உறைவிடம்

வேத காலத்தில் தாவரங்களை தெய்வங்களின் உறைவிடமாகவே கருதியுள்ளனர்.

**உதாரணம்:** ஆல் (வடபத்ர விருட்சம்) மரம்

இம்மரத்தின்,

- வேர் பகுதி, பிரம்மாவாகவும்
- தண்டு பகுதி, சிவனாகவும்
- கிளைப் பகுதி, விஷ்ணுவாகவும்

ஆக மும்மூர்த்திகளாக எண்ணி வழிபட்டனர். மேலும்,

- அரச மரத்தை, விஷ்ணுவாகவும்
- அத்தி மரத்தை, பிரம்மாவாகவும்
- வேம்பு மரத்தை, சக்தியாகவும்

இக்கடவுள்களின் உறைவிடமாக பாவித்து மரங்களை வழிபட்டு வருகின்றனர்.

## பொதியல் (அ) அம்பலம் (அ) மன்றம்

சங்ககாலத்தில் சமய சடங்குகளும், பொதுக்கூட்டங்களும், ஊர் பஞ்சாயத்துகளும் ஒரு குறிப்பிட்ட மரத்தடியில் தெய்வ நம்பிக்கையோடு

நடத்துவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. இந்நிகழ்வை பொதியல், அம்பலம் மற்றும் மன்றம் என்று கூறினர். இன்றும் தமிழகத்தில் சில கிராமங்களில் இது நடைமுறையில் உள்ளது. பொதுவாக இதற்கு 5 புனித மரங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் (சமஸ்கிருதத்தில், பஞ்சவட்டி), அவைகளை எந்த திசையில் நட வேண்டும் என்பதையும் வகுக்கப்பட்டுள்ளது.

அரசு - கிழக்கு

ஆல் - மேற்கு

வில்வம் - வடக்கு

நெல்லி - தெற்கு

அசோகா - தேன் கிழக்கு

தாவரத்தின் இலைகள் சுத்தமான காற்றை தருவதால், ஞானிகள் ஞானம் பெற உகந்த மரமாக இவை கருதப்படுகின்றன.

**(உ.ம்):** புத்தர் ஞானம் பெற்றது அரச மரத்தடியில்.

## வசிப்பிடத்திற்கு தாவரத்தின் பெயர்

ஆதி மனிதன் தனது வசிப்பிடங்களுக்கு, வசிப்பிடங்களில் உள்ள தாவரங்களின் பெயரை வைத்தே அழைத்துள்ளான்.

**(உ.ம்):**

திருநெல்வேலி = திரு + நெல் + வேலி

திருவல்லிக்கேணி = திரு + அல்லி + கேணி

பனையூர் = பனை + ஊர்

இவையே இன்றளவும் நிலைத்து விட்டது.

## மனிதர்களுக்கும் தாவரத்தின் பெயர்

இடத்திற்கு மட்டுமின்றி, தங்களுக்கும் தாவரங்களின் பெயர்களை வைத்துக் கொண்டார்கள்.

(உ.ம்):

| | | |
|---|---|---|
| மருதமுத்து | = | மருதம் + முத்து |
| திருநாவுக்கரசு | = | திரு + நாவல் + அரசு |
| கமலக்கண்ணன் | = | கமலம் + கண்ணன் |

## நிலம் மற்றும் இசைக்கும் தாவரத்தின் பெயர்கள்

தாவரங்களை அடிப்படையாகக் கொண்டே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என 5 வகை நிலங்களை பகுத்தனர். இவைகளுக்குரிய இசையையும் குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தல்பண், பாலைப்பண் என தாவரத்தின் பெயர்களில் அமைத்துள்ளனர்.

## போர் புரியும்போது பூக்களை அணிவது

மன்னர்கள் போர் புரியும் முறைகளிலும் பூக்களை வைத்து போரின் தன்மையை பிறருக்கு எளிதில் புரிய வைத்தனர்.

| | | |
|---|---|---|
| எதிரியின் பசு மந்தையை கவர்ந்து வரும்போது | - | வெட்சி பூ மாலையையும் |
| கவர்ந்த பசுமந்தையை மீட்டு வரும்போது | - | கரந்தை மாலையையும் |
| போருக்கு புறப்படும்போது | - | வஞ்சி மாலையையும் |
| எதிர்த்து வருபவர்கள் | - | காஞ்சி மாலையையும் |
| மதில் காத்து நிற்பவர்கள் | - | நொச்சி மாலையையும் |

போர் புரியும்போது - தும்பை மாலையையும்

வெற்றி பெற்று வரும்போது - வாகை மாலையையும்

அணிந்து கொள்வார்கள்.

## நேரம் மற்றும் காலத்தை உணர்த்த தாவரங்கள்

பழங்கால தமிழர்கள் தாவரங்களைக் கொண்டே நேரத்தையும், காலத்தையும் உணர்ந்துள்ளனர்.

**(உ.ம்):**

காலையில் மலர்வது - பரங்கி

மாலையில் மலர்வது - அந்திமந்தாரை, பீர்க்கன்

இரவில் மலர்வது - அல்லி

யாமத்தில் (நடு இரவு) மலர்வது - பவழமல்லி

ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது - காந்தள், பனை, புளி

பல ஆண்டுகளுக்கு ஒரு முறை மலர்வது,

12 ஆண்டுகள் - குறிஞ்சி

15 ஆண்டுகள் - தாளிபனை

60 ஆண்டுகள் - மூங்கில்

## புலவர்களும் தாவரமும்

* ஔவையார் ஒரு பாடலில் கடப்பாரையைக் கொண்டு பிளக்க முடியாத பாறையை கூட தாவரத்தின் நுண்ணிய வேர்முனை துளைத்து தூளாக்கிவிடும் வலிமையுடையது என்று பாடியுள்ளார்.
* நெல்லிக்கனியை மன்னனுக்கு பரிசளித்ததிலிருந்தும்,

* பாரிவள்ளல் தனது தேரினை முல்லை கொடி படர்வதற்கு கொடுத்ததிலிருந்தும்,

தாவரங்களையும் தன்னைப் போல் ஒரு ஜீவனாக கருதிய விதம் உணர முடிகிறது.

## முக்கிய தாவரங்கள்

### 1. கரந்தை

சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளதைப் போல் கரந்தை என்பது ஒரு பூண்டாகும். இது மருத நிலத்தில் வயலில் காணப்படுவதாகும். இதன் பூ சிகப்பாகவும், நறுமணமுடையதாகவும் இருக்கும் என்பர். இந்தச் செடி இன்று கொட்டாங்கரந்தை என்று தமிழில் வழங்கப்படுகிறது. இதன் பூ கொட்டை போன்று கருஞ்சிவப்பாக இருக்கும் என்று அறிவியல் அறிஞர்கள் கூறுவர். இதை கீழ்காணும் சங்க இலக்கிய பாடல் குறிப்பிடுகிறது.

**சான்று**

"கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை" – (குறிஞ்சி பாடல்)

**கரந்தையின் வகைகள்**

கரந்தையில் இரண்டு வகைகள் உண்டு.

i) **நாறு கரந்தை:** இது சிவப்பு பூ பூக்கும் தன்மையுடையது.

ii) **விஷ்ணு கரந்தை:** இது வெள்ளைப் பூ பூக்கும் தன்மையுடையது.

### 2. களா

பொதுவாக களா காடுகளில் காணப்படும் களாவின் கனியானது பளபளவென்று கருமையாக இருக்கும். சீரியாழ்க் கோடும், பேரி யாழ்க் கோடும் களாக்கனி போன்று கருமையாக இருந்தனவாக கூறப்பட்டுள்ளது. களாபழம் இனிப்பும், புளிப்பும் கலந்த சுவை உ...

கிம்புளி என்றும் களவுப்புளி என்றும் இதை கூறப்பட்டுள்ளது. இளவேனில் காலத்தில் இது பூப்பதாகும். சங்ககாலத்தில் முனிவர்கள் காடுகளில் சுற்றித் திரிந்த போது களாப்பழத்தை உண்டு உயிர் வாழ்ந்திருக்கிறார்கள் என்று சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது.

சான்று

*"களாங்கனி அன்ன கதழ்ந்து கிளர் உருவின்*
*வளர்ந்து ஏந்து மருப்பின்வள் உயிர்ப் பேரியாழ்"*

*(மலைபடு-36-37)*

### 3. சூரல்

நச்சினார்க்கினியர் குறிஞ்சிப்பாட்டில் முதலில் சூரல் என்பதற்குப் பிரம்பு என்று பொருள் கூறினார். மேலும் இலக்கியத்தில் இதை சூரல் கொடி என்றும் சூரை என்றும் அழைக்கப்பட்டது. இந்தச் செடி முள்ளுடன் புதராகக் காணப்படும். இது இலந்தை இனத்தைச் சார்ந்தது என்பர்.

### 4. வெள்ளை மலர் (காக்கணம் பூ)

இந்த வெள்ளை மலர் ஒருவகை காக்கணம் பூ வகையைச் சார்ந்தது என்பர்.

நீலக் காக்கணஞ் செடியையும், வெள்ளைக் காக்கணஞ் செடியையும் அழகிற்காக இக்காலத்தில் பூந்தோட்டங்களில் வளர்க்கின்றனர்.

சான்று

*"எருவை செருவிளை மணிப்பூங் கருவிளை"* – (குறிஞ்சி)

இந்தக் குறிஞ்சிப்பாட்டு, இதை செருவிளை வெண் காக்கணம் எனக் கூறுகிறது.

### 5. கூதாளம்

கூதாளம் நீர்ச் சுழலில் காணப்படும் கொடியாகும். அதனால் இதை நீர்த்தாளி என்றும் கூறுவர். இப்பொழுது தமிழ்நாட்டில் சிறுதாளி என்பதே கூதாளம் எனப்படுகிறது.

பொதுவாக இது 3000 அடி உயரமுள்ள குன்றுகளில் காணப்படும். அதனால்தான் கூதாளமாகிய சிறுதாளி சங்க நூல்களில், குளவி என்ற செடியுடன் குறிஞ்சியில் பெரும்பாலும் குன்றுகளில் காணப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

சிறு மலையிலும், பெருவரையிலும், மழைச்சாரலிலும், நீர்திகழ் சிலம்பிலும், நெடுவரையிலும் பெரும்பாலும் கூதாளம் சிறந்ததாக சங்க நூல்களில் உரைக்கப்பெற்றுள்ளன.

**சான்று**

அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன் (திருமுரு - 191 - 192)

கூதாளத்தில் உள்ள வெள்ளிய பூவைக், வெண்கூதாளம் என்று திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 6. முண்டகமும் முள்ளியும்

சங்க இலக்கியங்களில் முண்டகம், முள்ளி என்று முள்ளுடைய செடிகளைப் பற்றி சொல்லப்பட்டுள்ளன.

இதில் முண்டகம் என்பதற்கு கழிமுள்ளி, முள்ளி, கடல் முள்ளி என்றும் பொருள் கூறியுள்ளனர். இருப்பினும் இக்காலத்தில் முள்ளியை "நீர்முள்ளி" என்று பேச்சு வழக்கில் சொல்லப்படுகிறது.

**சான்று**

'மணிப்பூ முண்டகத்து மணல்மலி கானல்' (மதுரை - 96)

"முகை சூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்
கொடுங்கார் மாமலர் கொய்து கொண்டு அவண"
(பெரும்பாண் -214-16)

### 7. கொடி

கொடி வகைகள் நீண்டு வளரக்கூடியது, ஆனால் தனித்து நிற்கும் ஆற்றல் இல்லாதவை. பிறவற்றைப் பற்றிக் கொண்டு வளரக்கூடியவை.

இவற்றின் தண்டுப் பகுதி மிக மெல்லியவை. கயிறு போன்று இருக்கக்கூடியவை.

### கொடியின் வகைகள்

கொடியை அவற்றின் தன்மையினைப் பொறுத்து வகைப்படுத்தலாம். அவை,

(i) வேர்க்கொடி

(ii) படர்க்கொடி

(iii) சுற்றிக் கொடி

(iv) பெருங்கொடி

(v) பற்று கம்பிக்கொடி

### தண்டின் (அ) கொடியின் பகுதிகள்

#### (i) தண்டின் மெலிந்த பகுதி

இதை **நுண் கொடி (அகம்-237), புன்கொடி (மலை-101), மென்கொடி (குறுந்-186)** எனவும் அழைக்கப்படுகிறது. இது கொடியின் மெலிந்த தன்மையை காட்டுகிறது.

#### (ii) தண்டின் பருத்த பகுதி

இதை **பருவக் கொடி** எனவும் அழைக்கப்படுகிறது. இது தண்டின் பருத்த தன்மையை காட்டுகிறது.

#### (iii) தண்டின் வளமானப் பகுதி

இதை **நெடுங்கொடி (ஐங்கு-6), மாக்கொடி(குறுந்-256)** எனவும் அழைக்கப்படுகிறது. இது கொடியின் வளமானத் தன்மையை காட்டுகிறது.

### (iv) தண்டின் நிறம்

இதை **வெண்கொடி (ஐங்-456), கருங்கொடி** (மலை-521), செங்கொடி (ஐங்-25), **பைங்கொடி (பெரு-337)** எனவும் அழைக்கப்படுகிறது. இது கொடியின் நிறத்தினை காட்டுகிறது.

### (v) கொடியின் மனம்

*இதை நறுங்கொடி தாமலம்* (நற்-242)

இது நல்ல மனத்தைக் குறிக்கிறது.

- **படர்க்கொடி:** இதை ஆங்கிலத்தில் "கிரீப்பர்" என்பர்.
- **ஏறு கொடி:** இதை ஆங்கிலத்தில் "கிளைம்பர்" என்பர்.

## 8. செடி

நிலத்தில் புதர், புதராய் மண்டி வளர்ந்திருப்பதனை 'செடி' என்றும் "குறுமரங்கள்" என்றும் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது.

### செடிகளின் வகைகள்

செடிகளின் வாழ்நாள் அடிப்படையில் அவற்றை மூன்றாக வகைப்படுத்துவர்.

### (i) ஒரு பருவச் செடி

இது ஒரு குறிப்பிட்ட பருவத்தில் தோன்றி சில வாரம் (அ) மாதங்களில் இலையும், பூவும், கனியும் உண்டாகி விதை முற்றி அப்பருவத்திலேயே பட்டுப் போகும்.

### (ii) இரு பருவச் செடி

இதில் முதலில் சேமித்தல் நடைபெறும். பிறகு அந்த சேமிப்பைக் கொண்டு பூவும் கனியும் உண்டாகும். பிறகு அந்த தாவரம் முழுவதும் பட்டுப்போகும்.

(iii) பல பருவச் செடி

இச்செடி ஒரு முறை வளர்ந்த பின் பூ, கனிகளை உண்டாக்கி வெளிப்புறமிருக்கும் தண்டுக்கிளை மட்டுமே அழிந்து போகும். நிலப்பரப்பின் உட்புறம் உள்ள கிழங்கு (அ) மட்டத் தண்டுக்கிழங்கு போன்றவற்றிலிருந்து புதிய தண்டுக் கிளை முளைத்து வளரும். இத்தகைய வளர்ச்சி முறையானது 3 (அ) 4 ஆண்டுகள் வரை நடைபெறும்.

9. காளான்கள் (அ) ஆம்பி

சங்க இலக்கியத்தில் காளான்களை 'ஆம்பி' என்ற பெயரில் சொல்லப்பட்டிருக்கிறது.

சான்று

"ஆம்பி வான்முகை அன்ன கூம்பு முகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி நிரை தெரிந்து" (பெரு-157-58)

என்று காளான் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

10. புலன் உணர்வு பெற்ற தாவரங்கள்

அனிச்சம், நெருஞ்சி ஆகிய தாவரங்கள் புலன் உணர்வு பெற்ற தாவரங்களாக சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

நெருஞ்சி

தரைத் தாவரமான நெருஞ்சி மலர்ந்ததும் கதிரவனின் ஒளியை எதிர்க்கொள்ளும் தன்மையது. இதனை அகநானூறு மிக அழகாக காட்டுகிறது.

சான்று

"சுடரொடு திரிதரும் நெருஞ்சி" (அகம் - 336)

## 4.1.2 விலங்குகள்

பழங்காலத்தில் விலங்குகள் குறித்த அறிவு இருந்துள்ளது என்பதற்கு பல்வேறு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

### காட்டு விலங்கு, நாட்டு விலங்காதல்

ஆதிகால மனிதன் காட்டில் வாழ்ந்தபோது கொடிய விலங்குகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள ஆபத்தில்லா எளிய விலங்குகளை பயன்படுத்த தொடங்கினான். காட்டுக்கு வெளியே வீடு கட்டி வாழ்ந்த மனிதன், காட்டிலிருந்து கொண்டு வந்த விலங்குகளை வீட்டில் வளர்க்கத் தொடங்கினான். அவை வீட்டு விலங்காக மாறின.

காடுவாழ் முனிவர்களுக்கு கலையும், மந்தியும், மாவும், களிறும், சுழல் விலங்காகி அமையும் சங்கக் காட்சிகள் பலவற்றினைக் காணலாம்.

**சின்னாம் முரலும் அனங்குடைச் சாரல்**
**மஞ்சை சூலும் மரம்பயில் இறும்பில்**
**கலை பாய்ந்து உதிர்த்த மலர் வீழ் புறவின்**
**மந்தி சீக்கும் மா துஞ்சும் முன்றில்**
**செந்தீப் பேனிய முனிவர் வெண்கோட்டுக்**
**களிறு தரு விறகின் வேட்கும்**
**ஒளிறு இயங்கு அருவிய மலை**

*(பெரு.493-500)*

இதன் பொருளானது முன்றிலில் மா துஞ்சும் இக்காட்டுக் காட்சி போல், காட்டு வாழ்வில் அமைவது சங்கச் சித்திரமாகும். காட்டில் இயல்பாக விலங்கு இருக்கக்கூடும். நாட்டில் அவை வசப்படுத்தப்பட்டு, பழக்கப்பட்டு வளர்ப்பு விலங்குகளாக இருக்கின்றன.

### கொடிய விலங்கும் வீட்டு விலங்காதல்

மலைக்கும் மலையாக, நாட்டுக்கும் தலைவனாக இருக்கும் மன்னனின் (நன்னன்) முன்றியில் காட்சிப்படும் கான விலங்குகளின் பட்டியல் ஒன்று மலைபடுகடாமில் இடம் பெற்றுள்ளது.

குட்டிகளாக சுட்டப்பட்டிருக்கும் வனவிலங்கும் இங்கு காணப்படுகிறது. கொடிய விலங்குகளும் குட்டிகளாக பிடிக்கப்பட்டால் அவை வீட்டு வளர்ப்பு உயிரிகளாக உருவாக்க முடியும் என்பது இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.

காட்டுப் பசு, கரடி, வரையாடு, கீரி, செம்பாறி, மரை, உடும்பு, மயில், கோழி என உயிரியல் பூங்கா போன்ற முன் தோற்றம் தருகின்றன. பரிசுப் பொருளாக, திரைப் பொருளாக இவை இருக்கலாம் என்பது பின் நூல்களான சிலப்பதிகாரம் (காட்சி-48-54), பெருங்காதை (58,83-93), ஆகியவற்றில் காணப்படும் ஒத்த விலங்கு, பறவைப் பட்டியலால் அறியலாம்.

### புறச்சேரியில் வளர்ப்பு விலங்குகள்

புகார் நகரின் புறச்சேரியிலும் வளர்ப்பு விலங்குகளாக கோழியும், பன்றியும், தகரும், சிவலும் பட்டினப்பாவையில் காட்டப்பட்டுள்ளது.

**சான்று**

*பிறழ்ப் பன்றிப் பல கோழி*
*உறைக் கிணற்றுப் புறச்சேரி* *(பட்டி 75-77)*
*மேழகத் தகரொடு சிவல் விளையாட*

### தொழிலுக்காக வளர்ப்பு விலங்குகள்

அச்ச மெய்ப்பாட்டிற்குரிய அடிப்படைகளுள் ஒன்றாக விலங்குகள் திகழ்கின்றது என்பதை தொல்காப்பியம் கூறுகிறது (தொல்-1202). எனினும் அஞ்சத்தேவைப்படா வளர்ப்பு உயிர்கள் பல.

* வாழ்வியலுக்கு இன்றியமையாத பால் வளன் தரும் ஆநிறையும்.
* உணவு உற்பத்திக்குரிய உழு தொழிலுக்கு மிகத் தேவையான மாடுகளும்.

* உணவு, கம்பளி போன்ற ஆடைகளுக்காகவும் வளர்க்கப்படும் ஆடு வகைகளும் முக்கியமானவை.

கோவலரும், குறவரும் கூடத் தம் தொழிலாகவும், தொழிலுக்கு உதவியாகவும் இவற்றை வளர்க்கின்றனர். தனி இனத்தினருக்கு மட்டுமின்றி சமுதாயத்தினருக்கே இக்கன்று காளிகள் செல்வமாக இருப்பதும், பொருளாதார மேம்பாட்டுக்கும், முதன்மையாக இருக்கின்றது.

## வணிகத்தில் மாடும் கழுதையும்

வணிகத் தொழிலில் பயன்படும் வளர்ப்பு விலங்காக மாடும், கழுதையும் சுட்டப்பட்டுள்ளன.

### மாடு

உப்புத் தொழிலில் ஈடுபடும் உமணம் மாட்டு வண்டிகளைப் பயன்படுத்துவதையும் பெரும்பாணாற்றுப்படை சுற்றுகிறது.

**சான்று**

ஆரை வேயந்த அறைவாய்ச் சகடம்....
... மகவுடை மகடூஉப் பகடு புறந் துரப்ப...
... பல் எருத்து உமணர் பதி போகு நெறிநெறி (பெரு - 50 - 65)

### கழுதை

வணிகர்கள், மிளகுப் பொதிகளை ஏற்றிச்செல்ல கழுதைகளைப் பயன்படுத்துவதை கீழ்கண்ட பாடல் குறிப்பிடுகின்றது.

**சான்று**

மிரியால் புணர்ப் பொறை தாங்கிய வடு ஆழ் நோன்புறத்து
அணர்ச் செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்(பெரும் - 78 - 80)

## மலைவாழ் மக்கள் வேட்டைக்காக விலங்குகள்

வளர்ப்பு விலங்குகளான நாயுடன் வேட்டையில் ஈடுபடுபவராக மலைவாழ் இன மக்கள் சுட்டப்படுகின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மனிதனால் நாய் பழக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அதுவே மனிதனால் வளர்க்கப்பட்ட முதல் வீட்டு விலங்காக இருக்கலாம் என்ற கருத்தும் ஆய்வாளர்களால் கூறப்படுகிறது.

## ஆநிரை மீட்பதில் நாய்

நாய் மனிதனோடு மிக நெருக்கமாக பழகும் குணம் கொண்ட விலங்கு, அதனால் மோப்ப சக்தி மிகுந்த இந்த விலங்கினை மலைவாழ் மக்கள் பயன்படுத்தினர். ஆநிரைக் கவர்தலில் நாய் பயன்பட்டதை பெரும்பாணாற்றுப்படை சுட்டுகிறது.

**சான்று**

**புல் அனத் காலை செல்நாய் அன்ன கருவில் சுற்றமொடு....**
**நாள் ஆ தந்து** *(பெரும் - 138 - 143)*

எனும் அடிகள் உணர்த்துகின்றன.

## காவலுக்கு நாய்

நாய் காவலுக்கும் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதையும் குறிஞ்சியில் சுட்டப்பட்டிருக்கிறது.

**சான்று**

**காவலர் கடுகினும் கத நாய் குறைப்பினும்** *(குறிஞ்சி - 240)*

பெண் நாய் வேட்டையாடி வந்த மாமிசம் குறித்து மலைபடுகடாம் (175 -177) குறிக்கிறது

## பன்றி, முயல்

பன்றி, முயல் போன்ற விலங்குகளையும் மக்கள் வேட்டைக்கு பயன்படுத்தி இருப்பதையும் சங்க இலக்கியங்களில் இருந்து அறிய முடிகிறது.

## உணவுக்காக விலங்குகள்

மனிதன் என்னென்ன காரணங்களுக்காக பிற உயிர்களை வளர்த்தான் எனப் பார்க்கும்போது,

வேட்டை விலங்காக - நாய், பூனை

அழகுக்காக - அணில்

விளையாட்டுக்காக - அன்னம், மயில்

சமய நோக்கிற்காக - குதிரை, காளை, சண்டைக் கோழி

உணவிற்காக - பன்றி, கோழி, ஆடு

ஆனால், அடிப்படை நோக்கம் உணவு தேவைக்காகவும், தோல் மற்றும் வேலை செய்யவும் என்று தெரிய வருகிறது.

**சான்றுகள்**

i) பன்றி, கோழி ஆகியன உணவின் முன்னிற்கும் விலங்குகள் ஆகும்.

**"ஊர் - ஆர் வட்டியர் சிறுகண்**
**பன்றிப் பழுதுளி போக்கி"**

*(மலை -152 -153)*

ii) கோழியானது உணவுக்காக வளர்க்கப்பட்ட செய்தியினை குறிப்பிடுகிறது.

**"வேழம் காவலர் குரம்பை எய்ப்பக்**
**கோழி சேக்கும் கூடுடைப் பதவின்"**

*(பெரும் - 51 - 52)*

**சான்றுகள்**

i) ஊன் விற்போர் குடியில் விலங்குகள் அதிகளவில் வளர்க்கப்படுவதை கீழ்காணும் வரிகள் சுட்டிக்காட்டுகிறது.

“விலைஞர் குரம்பை மா ஈண்டவும்” *(பட் - 198)*

ii) பண்டமாற்றாக, கன்று வாங்கப்பெற்ற தரவும் உள்ளது.

“நெய்விலைக் கட்டிப் பசும் பொன் கொள்ளான்
எருமை, நல், ஆன், கருநாகு, பெறா உம்” *(பெரு - 164 -165)*

iii) கள்ளுக்காகப் பசுவை பண்ட மாற்றியதாகவும் பெரும்பாணாற்றுப்படை பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

### பாம்பும், குரங்கும்

விலங்குகளின் செயல்பாடுகளில் இருந்து பல பழமொழிகள் தோன்றியுள்ளன.

“பாம்பு என்றால் படையும் நடுங்கும்”

“குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்”

குரங்குகளுக்கு பாம்பை கண்டால் மிகவும் அச்சம். மலைப்பாம்புகள் மரத்தில் அதன் விழுதுகளைப் போல் தொங்கி குரங்குகளைப் பிடித்துக் கொண்டு உண்ணும் என்பார்கள். இதனால் குரங்குகளை பார்த்தால் பாம்புகளுக்கு அச்சமும் நடுக்கமும் ஏற்படுகின்றன எனலாம். இதை கீழ்காணும் வரிகள் தெளிவுபடுத்துகிறது.

**சான்று**

“பைங்கண் ஊகம் பாம்பு பிடித் தன்ன
அங்கோட்டுச் செறிங்க அவிழ்ந்துவீங்கு திவவின்”
*(...பாண் 221 - 222)*

ஊகக் குரங்கு ஒன்று பாம்பிற்கு பயந்து பாம்பைப் பிடித்துக் கொண்டு, விட்டுவிட்டால் கடித்து விடுமோ என்று அஞ்சிப் பிடித்த பிடியைத் தளரவிடாமல் இறுக்கிப்பிடித்துக் கொள்ளும் என்கிறது. இதுவே 'குரங்குப் பிடி' என்ற வழக்கு தோன்றிருக்கலாம்.

## புலியும் யானையும்

புலியும் யானையும் வலிமைமிக்க இரண்டு விலங்கினங்கள். இவைகள் எப்போதும் ஒன்றாக இருந்ததில்லை. உணவுக்காக ஒன்றுக்கொன்று போரிட்டுக் கொள்ளும் செய்திகள் அடங்கிய பல பாடல்கள் அகநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

சங்ககாலப் பாடல்களில் புலியை யானை கொல்வதும், யானையை புலி கொல்வதும், இரண்டும் போரிட்டு களைத்து வெல்ல முடியாமல் புண்களுடன் போவதும் ஆங்காங்கே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

## புலியின் உணவு

புலி பசித்தாலும் புல்லை திண்ணாது. புலி தனது இறையாக மான்களையும் பன்றிகளையும் வரிக்குதிரைகளையும் காட்டெருமைகளையும் கொன்று உண்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கும். புலி தான் கொன்ற விலங்குகளை நெடுந்தொலைவு இழுத்துச் சென்று பதுக்கி உண்ணும். எஞ்சிய உணவை தனது குகையில் பதுக்கி வைத்துக் கெட்ட நாற்றம் அடித்து புழுத்துப் போனாலும் மீண்டும் மீண்டும் அதையே உண்ணும் என்று அகநானூற்றுப் பாடல் தெளிவு படுத்துகிறது.

## யானையின் உணவு

யானை பசித்தாலும் மாமிசம் உண்ணாது. காடுகளின் அருகே உள்ள விலை நிலங்களில் புகுந்து பயிரை உண்டு அழிப்பதையும், காடுகளில் உள்ள மூங்கிலையும் விரும்பி உணவாக கொள்வதையும் பல சங்கப் பாடல்கள் உரைக்கின்றன.

குட்டி ஈன்ற பெண் யானைக்கு முற்றாத மூங்கில் முளையை ஆண் யானை தருவதை கீழ்காணும் அகநானூற்று பாடல் விளக்குகிறது.

**சான்று**

"ஈன்றுநா ளுலந்த மென்னடை மடப்பிடி
கன்றுபசி களைஅய பைங்கண் யானை
முற்றா மூங்கில் முளைதரு பூட்டும்
வென்வேற் றிரையன் வேங்கட நெடுவரை"
(அகம் - 85)

தமிழர்கள் சங்ககாலம் முதல் தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றை எவ்வாறு பயன்படுத்தினர் என்பதையும், அதன் பல்வேறு குணங்கள், உருவ அமைப்புகள் ஆகியவற்றையும் இலக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

## 4.2 தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியத்தில் அகம் மற்றும் புறக் கோட்பாடுகள்

### 4.2.1 அகத்திணை (அ) அகக்கோட்பாடு

உலக வளர்ச்சிக்கு அன்பின் தொடர்பு இன்றியமையாதது. அந்த அன்பு இரண்டு உயிர்களின் தனித்தனி நிலையில் உண்டாவதில்லை. அவை ஆணும், பெண்ணும் என்ற இரண்டின் கூட்டுறவால் நிகழும் வாழ்வியல் முறையாகும்.

**அகம் - வரையறை (பொருள்)**

அகம் என்பது ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் கண்டு, காதலித்து, மணம் புரிந்து, இல்லறம் நடத்தி, தமக்குள்ளே இன்பம் துய்த்து வாழ்தல் அகவாழ்வு ஆகும்.

ஒரு வாழ்வின் அகம் சார்ந்த பகுதி அகத்திணை எனப்பட்டது.

**திணை (அ) ஐந்திணை**

திணை என்பதன் பொருள் நிலம், ஒழுக்கம்.

நிலப் பாகுபாட்டையும் தலைவன் - தலைவி ஆகியோர் அகவாழ்வின் பல்வேறு நிகழ்வுகளையும் ஒட்டி திணை பாகுபாடு அமைந்துள்ளது.

## திணை வகைகள்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன ஐந்து திணைகளாகும். ஐந்து திணைகளுக்கும் தனித்தனியே நிலங்கள் பகுக்கப்பட்டுள்ளன.

## திணையும் நிலமும்

குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த நிலமும்

முல்லை - காடும் காடு சார்ந்த நிலமும்

மருதம் - வயலும் வயல் சார்ந்த நிலமும்

நெய்தல் - கடலும் கடல் சார்ந்த நிலமும்

பாலை - மணலும் மணல் சார்ந்த நிலமும்

## திணையின் பாகுபாடு

ஒவ்வொரு திணைக்கும் கீழ்காணும் பாகுபாடுகள் உண்டு.

i) முதற்பொருள்

ii) கருப்பொருள்

iii) உரிப்பொருள்

### 1. முதற்பொருள்

மக்களின் வாழ்க்கை முறையானது நிலம், பொழுது என்னும் இரண்டனோடும் பின்னிப் பிணைந்து உள்ளது. எனவே நிலமும், பொழுதும் (காலமும்), முதற்பொருள் எனப்படும். இது இயற்கையை முன்னிறுத்துகிறது.

**நிலம்:** ஐந்திணைகளில் வரும் மலை, காடு, வயல், கடல், மணல் சார்ந்த இடங்களையே குறிக்கும்.

**பொழுது:** இது இரு வகைப்படும்.

* சிறுபொழுது
* பெரும்பொழுது

இந்த பொழுதுகள், ஐந்திணைகளுக்கும் தனித்தனியே வகுக்கப்பட்டுள்ளன.

**(i) சிறுபொழுது**

ஒவ்வொரு சிறுபொழுதும் நாழிகை அடிப்படையில் கணக்கிடப்பட்டது.

24 நிமிடம் = 1 நாழிகை

2½ நிமிடம் = 1 மணி நேரம்

4 மணி நேரம் = 1 சிறுபொழுது

**சிறுபொழுதும், காலப்பகுப்பும்**

| சிறுபொழுது | காலப்பகுப்பு |
|---|---|
| காலை | 6 - 10 மணி |
| நண்பகல் | 10 - 2 மணி |
| ஏற்பாடு | 2 - 6 மணி |
| மாலை | 6 - 10 மணி |
| யாமம் (இரவு) | 10 - 2 மணி |
| வைகறை (விடியல்) | 2 - 6 மணி |

**ஏற்பாடு = எல் + பாடு,**

எல் - கதிரவன், பாடு = படுதல், கதிரவன் மறைந்து படும் மாலை நேரம்.

### (ii) பெரும்பொழுது

பெரும்பொழுது 6 வகைப்படும். ஒவ்வொரு பெரும் பொழுதும் இரண்டிரண்டு மாதங்கள் நடக்கும்.

### பெரும்பொழுதும், மாதப்பகுப்பும்

| பெரும்பொழுது | மாதப்பகுப்பு |
|---|---|
| இளவேனிற் காலம் | சித்திரை, வைகாசி |
| முதுவேனிற் காலம் | ஆனி, ஆடி |
| கார்காலம் | ஆவணி, புரட்டாசி |
| குளிர்காலம் | ஐப்பசி, கார்த்திகை |
| முன் பனிக்காலம் | மார்கழி, தை |
| பின் பனிக்காலம் | மாசி, பங்குனி |


### திணையும், பொழுதும் (முதற்பொருள்)

| திணை | முதற்பொருள் | |
|---|---|---|
| | பெரும்பொழுது | சிறுபொழுது |
| குறிஞ்சி | குளிர் காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | 6 பெரும்பொழுதுகளும் | வைகறை |
| நெய்தல் | 6 பெரும்பொழுதுகளும் | ஏற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

## 2. கருப்பொருள்

இது விலங்கு, புல், உணவு போன்ற இயற்கை பொருட்களும், யாழ், பறை போன்ற செயற்கைப் பொருட்களும் கலந்திருப்பதால், இது இயற்கையும் செயற்கையும் கலந்த 14 கூறுகளை ஒன்றாக பெற்றுள்ளது.

### நிலமும் கருப்பொருளும்




## 3. உரிப்பொருள்

### திணையும், உரிப்பொருளும்

| திணை | உரிப்பொருள் |
|---|---|
| குறிஞ்சி | புணர்தலும், புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | இருத்தலும், இருத்தல் நிமித்தமும் |

| திணை | உரிப்பொருள் |
| --- | --- |
| மருதம் | ஊடலும், ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | இரங்கலும், இரங்கல் நிமித்தமும் |
| பாலை | பிரிதலும், பிரிதல் நிமித்தமும் |

## அகத்திணையின் வகைகள்

அகவாழ்வை இரண்டு அடிப்படைகளைக் கொண்டு வகைப்படுத்தப் படுகிறது.

### 1. ஐந்திணை ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அகத்திணை வகையீடு

அகவாழ்வை ஐந்திணை ஒழுக்கம் அடிப்படையில் இரண்டு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

i) களவு வாழ்க்கை

ii) கற்பு வாழ்க்கை

#### (i) களவு வாழ்க்கை (அ) களவு ஒழுக்கம்

களவு ஒழுக்கம் என்பது தலைவனும், தலைவியும் பெற்றோர் அறியாமல் தாமே சந்தித்துக் கூடுவது. இக்களவு பிறரின் பொருள்களை அவர்கள் அறியாமலேயே கவர்ந்து கொள்ளும் களவு (திருட்டு) போல தீயது அன்று. அவர்கள் பின்பு மணம் செய்து கொண்டு மனையறம் காக்கும் கடமை உள்ளதால் இவையும் அறமாகவே கருதப்படுகிறது.

#### (ii) கற்பு வாழ்க்கை (அ) கற்பு ஒழுக்கம்

கற்பு ஒழுக்கம் என்பது காதலனும், காதலியும் தனது காதலை சுற்றத்தாருக்கு தெரியப்படுத்தி, சடங்குகளோடு மணம் செய்து கொடுப்பதைக் கூறுவதாகும்.

### 4. இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அகத்திணை வகையீடு

இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அகத்திணையை 7 பிரிவுகளாக பிரிப்பர். அவை,

1. குறிஞ்சி (கூடல் (அ) புணர்தல்)
2. முல்லை (பிரிதல்)
3. மருதம் (இருத்தல்)
4. நெய்தல் (இரங்கல்)
5. பாலை (ஊடல்)
6. கைக்கிளை
7. பெருந்திணை

#### கைக்கிளை

இது ஒரு தலைக்காமம். ஆண் விரும்பி, பெண் விரும்பாமலோ (அ) பெண் விரும்பி, ஆண் விரும்பாமலோ இருப்பின் அது கைக்கிளை.

#### பெருந்திணை

இது ஒரு பொருந்தாக் காமம். காதலிக்கும் ஆணை விட பெண் மிகவும் மூத்தவளாகவோ, பெண்ணை விட ஆண் மிகவும் மூத்தவனாகவோ இருப்பின் அது பெருந்திணை என்று பெயர் பெறும்.

இவ்விரு காமத்தையும் (கைக்கிளை, பெருந்திணை) நீக்கி அன்பின் ஐந்திணைகளை மட்டும் அக வாழ்க்கை கூறுகின்றது.

### 4.2.2 புறத்திணை (அ) புறக்கோட்பாடு

புறத்திணை என்பது காதல் தவிர்த்த ஏனைய மானுடப் பொருள்களைப் பற்றியது. அதாவது போர், வீரம், கொடை, புகழ், அறநெறி போன்ற வாழ்க்கையின் புறக்கூறுகளைப் பற்றியது.

## புறம் - பொருள் (வரையறை)

புறம் என்பது புறத்தே நிகழும் ஒழுக்கம் என்பதாகும். போர், அரசர்கள், புலவர்கள், தனிப்பட்ட ஒழுக்கம், ஆகியவற்றைப் பற்றி கூறுவதாகும்.

## புறத்திணையின் வகைகள்

புறத்திணை 7 வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை,

1. வெட்சி
2. வஞ்சி
3. உழிஞை
4. தும்பை
5. வாகை
6. காஞ்சி
7. பாடாண்

அகத்திணை ஏழும் புறத்திணை ஏழுனுக்கு இணையாக இருக்கும் நிலையையும், போர் முறையையும், தொல்காப்பியம் அழகாக எடுத்துக்காட்டுகிறது.

| புறத்தினை | புறத்திணைக்கு இணையான அகத்திணை | புறத்திணைக்குரிய போர் முறைகள் |
|---|---|---|
| வெட்சி | குறிஞ்சி | 1. ஆநிரை கவர்தல்<br>2. ஆநிரை மீட்டுக் கொள்ளுதல் |
| வஞ்சி | முல்லை | 1. போர் மேற்செல்லல்<br>2. போரினை எதிர்கொள்ளல் |
| உழிஞை | மருதம் | 1. மதிலை முற்றுகையிடுதல்<br>2. மதிலைக் காத்துக் கொள்ளுதல் |
| தும்பை | நெய்தல் | மாற்றான் மனம் அதிரப் போர் செய்தல் |
| வாகை | பாலை | பகைவனை வெற்றி கொள்ளல் |

| புறத்திணை | புறத்திணைக்கு இணையான அகத்திணை | புறத்திணைக்குரிய போர் முறைகள் |
|---|---|---|
| காஞ்சி | கைக்கிளை | உலகின் நிலையாமைக் கூறல் |
| பாடாண் | பெருந்திணை | தலைவனின் புகழினைப் பாடல் |

## புறத்திணை விளக்கம்

* பொதுவாழ்வில் காணப்படும் வீரம், கல்வி, கொடை, புகழ் முதலானவையும், நிலையாமை குறித்தனவும், புறப்பாடல்களில் இடம்பெறும்.
* அகத்திணை 7 என்பது முன்னது கூறப்பட்டுள்ளது. அதேபோல புறத்திணையும் 7. அவையாவன,

1. வெட்சி
2. வஞ்சி
3. உழிஞை
4. தும்பை
5. வாகை
6. காஞ்சி
7. பாடாண், என்பன.

இவை அகத்தினை ஏழோடும் தொடர்புடையவை. காலப்போக்கில் புறத்திணைகளை பன்னிரண்டாகப் பிரித்துள்ளனர். அவையாவன,

1. வெட்சி
2. கரந்தை
3. வஞ்சி
4. காஞ்சி
5. நொச்சி
6. உழிஞை
7. தும்பை
8. வாகை
9. பாடாண்
10. பொதுவியல்
11. கைக்கிளை
12. பெருந்திணை

என பன்னிரண்டாகப் புறப்பொருள் வெண்பாமாலை என்ற நூல் குறிப்பிடும்.

## புறத்திணையின் மூலம் தமிழரின் போர் மரபை அறிதல்

### 1. வெட்சித் திணை

பண்டைக் காலத்தில் பகைநாட்டின் மீது போர்த் தொடுக்க விரும்பும் அரசன், பகைநாட்டுப் பசுக்களை போரில் இறந்து போகாமல் காக்க தன் வீரர்களை அனுப்பி அவற்றைக் கவர்ந்து வரச் செய்வான்.

#### சூடும் பூ

பசுக்களை கவர்ந்து செல்வோர் வெட்சிப் பூவைச் சூடிச் செல்வர்.

### 2. கரந்தைத் திணை

பசு கூட்டத்தைக் கவர்ந்து செல்வோரிடமிருந்து பசு கூட்டத்தை மீட்பதுண்டு. இது கரந்தைத் திணை எனப்படும்.

#### சூடும் பூ

பசு கூட்டத்தை மீட்க செல்வோர் கரந்தைப் பூவை அணிந்து செல்வர்.

### 3. வஞ்சித் திணை

மண்ணாசை கொண்டு, பகை வேந்தனது நாட்டைக் கைப்பற்றும் முயற்சி மேற்கொள்வது வஞ்சித் திணை எனப்படும்.

#### சூடும் பூ

நாட்டைக் கைப்பற்றச் செல்வோர் சூடும் பூ வஞ்சிப் பூவாகும்.

### 4. காஞ்சித் திணை

மண்ணாசைக் கொண்டு போர் தொடுத்த பகைவர் படையை தன்னாட்டு எல்லைக்குள் புகாதவாறு காப்பது காஞ்சித் திணை எனப்படும்.

சூடும் பூ

எல்லையைக் காக்கும் பொழுது சூடும் பூ காஞ்சி பூ ஆகும்.

5. நொச்சித் திணை

மதிலை வளைத்துக் கொண்டப் பகைவர்கள் உள்ளே புகாதவாறு தடுத்துக் காப்பர்.

சூடும் பூ

மதிலைத் தடுக்கும்பொழுது சூடும் பூ நொச்சிப் பூ ஆகும்.

6. உழிஞைத் திணை

மாற்றான் மதிலை முற்றுகையிடுவது உழிஞைத் திணையாகும்.

சூடும் பூ

அத்தகைய செயலில் ஈடுபடுவோர் சூடும் பூ உழிஞைப் பூ ஆகும்.

7. தும்பைத் திணை

வேந்தர் இருவர் மாறுபாடு கொண்டு எதிர் நின்று போரிடுவது தும்பை திணை எனப்படும்.

சூடும் பூ

அதற்கு அடையாளமாக தும்பை பூ அணிவர்.

8. வாகைத் திணை

போரில் ஆரவாரித்தல் வாகைத் திணை எனப்படும்.

சூடும் பூ

போரில் வெற்றி பெற்ற அரசன் சூடுவது வாகைப் பூவாகும்.

### 9. பாடாண் திணை

பாடப் பெரும் அரசனுடைய வீரம், கொடை, புகழ் முதலிய அரும் பண்புகளைப் போற்றிப் பாடுவது,

**பாடு + ஆண் + திணை**

என பிரியும்.

பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறு எனப் பொருள்படும்.

### 10. பொதுவியல் திணை

இதுவரை கூறப்பட்ட புறத்திணைகளுக்கு எல்லாம் பொதுவாக உள்ளனவும், அவற்றில் கூறாது விட்டனவும் ஆகிய செய்திகள் பொதுவியலில் இடம்பெறும்.

### 11. கைக்கிளை

தலைமகன், தலைமகள் ஆகிய இருவரில் ஒருவரிடத்தில் மட்டும் தோன்றுகின்ற ஒரு தலை காமமே கைக்கிளை ஆகும்.

#### வகைகள்

கைக்கிளை இரண்டு வகைப்படும். அவையாவன,

1. ஆண்பாற் கைக்கிளை
2. பெண்பாற் கைக்கிளை

### 12. பெருந்திணை

1. இது பொருந்தாக் காதலைக் குறிக்கும்.
2. இருபாலரிடத்தும் தோன்றும்

### அன்பின் ஐந்திணைகளும் அவற்றின் முப்பொருட்களும்

அன்பின் ஐந்திணைகளாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை ஆகியவற்றின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை காணலாம்.

| பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| நீர் | அருவி நீர் | காட்டாறு | கிணறு, பொய்கை, ஆறு | மணல் கிணறு, உவர்க்குழி | வற்றிய சுனை, வற்றிய கிணறு |
| மரம் | அகில், வேங்கை, தேக்கு, சந்தனம் | கொன்றை, காயா | காஞ்சி, மருதம், வஞ்சி | புன்னை, ஞாமுல் | பாலை, இலுப்பை |
| பூ | குறிஞ்சி | முல்லை | செய்கழுநீர், தாமரை | நெய்தல், தாழை | குறவம், பாதிரி |
| பறவை | கிளி, மயில் | காட்டுக் கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, குருகு | கடற்காகம், அன்னம் | புறா, பருந்து |
| விலங்கு | புலி, யானை, கரடி, சிங்கம் | முயல், மான் | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலுவிழந்த யானை, புலி, செந்நாய் |
| உணவு | மலை நெல், தினை | வரகு, சாமை | செந்நெல் | மீன், முதலை, சுறா, உப்பு விற்று பெற்றப் பொருள் | பிறரிடமிருந்து கவர்ந்த பொருட்கள் |

| பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தொழில் | தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், வெறியாடல் | ஏறு தழுவுதல், பசு மேய்த்தல் | நெல் அரிதல், களைப் பறித்தல், புது நீராடல் | மீன் பிடித்தல், மீன் காயவைத்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, ஆநிரைக் கவர்தல் |
| பறை | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன்கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப் பண் | குறிஞ்சிப் பண் | மருதப்பண் | செவ்வழிப் பண் | பஞ்சுரப் பண் |
| தெய்வம் | முருகன் | திருமால் | வேந்தன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவன், குறத்தி | தோன்றல், ஆயன், ஆய்ச்சி | ஊரன், உழவன், உழத்தி | சேர்ப்பன், பரதவன், பரத்தி | எயினன், மறவன், மறத்தி |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பாடி, சேரி | பட்டினம், பாக்கம் | குறும்பு |

# 4.3 தமிழர்கள் போற்றிய அறக்கோட்பாடு

## 4.3.1 அறம்

அறம் (அ) ஒழுக்க நெறி (morality) என்பது ஒருவர் சமூகத்தில் எவ்வாறு நடக்க வேண்டும் என்பது தொடர்பான பார்வைகளை குறிக்கிறது.

மனிதன் தனக்கென வரையறுக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறம் என்று கூறுவர். அறம் என்னும் சொல்லுக்கு ஆங்கிலத்தில் எத்திக்ஸ் (Ethics) என்ற சொல் மிகவும் பொருந்துவதாக உள்ளது.

## 4.3.2 அறத்தின் அடிப்படை

அறம் என்பது செயலா, சொல்லா, எண்ணமா என்று பார்ப்போம். செயலுக்கு அடிப்படையாக இருப்பது எண்ணமாகும். எண்ணம் தூய்மையாக இருந்தால்தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமைய முடியும். எண்ணம் எழுவதற்கு இருப்பிடமாக உள்ள மனம் மாசு இல்லாததாக இருக்க வேண்டும். மனதின் மாசினைப் போக்குவதற்கு முயலுவதே அறமாகும். பொறாமை, பேராசை, வெகுளி, கடுஞ்சொல் ஆகியவை மனமாசுக்களாகும். அவை இல்லாமல் இருப்பதே அறம் ஆகும்.

## 4.3.3 மன்னர்களின் அறக்கோட்பாடு

சங்ககாலத்தில் தமிழகத்தில் மன்னராட்சி முறை இருந்தது. மன்னர்களின் செயல்களைப் பின்பற்றிய மக்களின் செயல்களும் இருந்தன. எனவே மன்னன் தான் நினைத்த செயல்களை எல்லாம் செய்திடலாம் என்ற சுய சிந்தனையும் செயலும் இருந்தது. இந்த நிலையில் அரசன் தன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகாமல் நடுநிலைமையோடு இருக்க வேண்டும் என்றால் அவனுக்கு மேல் ஒருவர் அரசனை வழிநடத்த (அ) கட்டளையிட (அ) கருத்து சொல்லக் கூடிய நிலை அமையப்பட்டது.

இந்த நிலைக்கு அறம் கொண்டு வரப் பெற்று, அந்த அறம் அரசனை வழிப்படுத்தியது. மன்னன் அறத்தின் பக்கம் நிற்க வேண்டும் என்ற விருப்பம் புலவர்களிடமிருந்தது.

**சான்று**

மதுரை மருதன் இளநாகனார் பாண்டியன் இளவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைக் குறித்து பாடும்போது,

கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல் மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

என்று பாடுகின்றார். அரசின் கொற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது அறநெறி என்பதே இந்த பாடலின் கருத்தாகும். இதிலிருந்து சங்க இலக்கியத்தில் தமிழர்கள் போற்றிய அறக்கோட்பாடு தெரியவருகிறது.

### 4.3.4 பல்வேறு செயல்களில் அறம்

#### 1. மிதவையைப் பற்றிக்கொண்டவரின் அறம்

வெள்ளப்பெருக்குடைய ஆற்றின் ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு மிதவையைப் பிடித்துக் கொண்டு எளிதாக போய்விடுவர். அதுபோல அறம் என்னும் மிதவையைப் பற்றிக் கொண்டவரும் இவ்வுலகில் இருந்து வீட்டுலகம் எளிதில் சேர்வர்.

**சான்று**

புணைகை விட்டோர்க் கரிதே துணையழ்த்
தொக்குயிர் வெளமும் காலை
இக்கரை நின்றவர்க் துக்கரை கொளலே

(புறம் - 357)

#### 2. மேகத்திலிருந்து பொழியும் மழையின் அறம்

உலக உயிர்களின் நலத்தை கருதிய மேகம் மின்னலுடன் தோன்றிப் பெருமழை பொழியும். அதுபோல தக்கப் பொழுதில் பிறரை

நல்வழிப்படுத்தும் ஒரு நோக்கமே கொண்டு அறவோர் அறநெறிகளைப் புகட்டுவர்.

**சான்று**

*மின்னொடு தொடர்ந்த மேகம்*
*மேதினிக்கு ஏதம் நீங்கப்*
*பொன்வரை முன்னர் நின்று*

(யசோதர காவி - 68)

### 3. தீயில் வேகும் பொன்னணி கலன்களின் அறம்

தீயிலே வேகும் பொன்னணி கலன்கள் மேலும், மேலும் ஒளியுடன் விளங்கும். அதுபோல் குறிக்கோள் என்னும் தீயில் புகுந்து மனமாசு என்னும் அழுக்கைப் போக்கிய அறவோர்களும் நாளும் சுடர் விடுவர்.

**சான்று**

**"மணியும் முத்தும் அணியும் கிழந்துதிர்ந்து**
**ஆரக் கம்மம் சாரவீற்றிருந்து**
**கொள்கைக் கட்டழல் உள்ளுற மூட்டி**
**மாசுவினை கழித்த மாதவர் போலத்**
**தீயகத் திலங்கித் திறல்விடு கதிரொளி**

(பெரும்: 2:19:62)

ஒழுக்கம் மனிதனுடைய உயர்ந்த குறிக்கோளாக இருத்தல் வேண்டும் என்பதனை மிகுந்த உறுதிப்பாட்டோடு அறிவித்துள்ளார்.

### 4. திருக்குறளில் அறம்

திருக்குறளில் அறத்துப்பால் மட்டுமே அறத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல பொருட்பால், இன்பத்துப்பால், அனைத்தும் அறத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

வள்ளுவர் "இல்வாழ்க்கை" என்னும் அதிகாரத்தில் அரண் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்கிறார். இல்வாழ்க்கையை அறநெறியோடும் பிறர் பழித்தல் இன்றியும் நடத்தத் தேவையானவைகள் வாழ்க்கைத் துணை, மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல்,

இனியவை கூறல் ஆகியவற்றுடன் அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை போன்ற இல்வாழ்க்கைக்குத் தேவையான நற்பண்புகளை மேற்கொள்வதுடன் அழுக்காறாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை ஆகியவையும் கடைபிடித்தல் அறநெறி வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்பதை அறத்துப்பால் வலியுறுத்துகிறது.

## 5. போரில் அறம்

மன்னன் பல்வேறு படைகளைப் பெற்றதனால் மிகுந்த வலிமை உடையவனாக உள்ளான். குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை, காலாட்படை என்ற படைகளை வைத்து மன்னன் ஆட்சி நடத்துகிறான். அவ்வாறு ஆட்சி நடக்கும்போது அறநெறியே முதன்மையாக இருக்க வேண்டும்.

இவர் தனக்கு தெரிந்தவர், இனியவர், நல்லவர் என்ற எண்ணத்தில் அவருக்காக நீதியில் இருந்து, நடுவு நிலையில் இருந்து நழுவக்கூடாது. அவர் தனக்குத் தொடர்பில்லாதவர், அயலவர் என்பதால் அவரின் நற்பண்புகளை ஒதுக்கி விடக்கூடாது.

மேலும், போரில் எதிரி புறமுதுகிட்டு போகும்போது அவனை தாக்காமலிருப்பதும், முதியவர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் இவர்களை போரில் கொல்லாமல் இருப்பது அறமாக பார்க்கப்பட்டது.

## 6. நீதி நூல் கூறும் அறம்

சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து, நீதி நூல்களும் அறத்தைப் பெரிதும் வலியுறுத்துகின்றன.

**சான்று**

*"வழிப்படரல் வாயல் வருந்தாமை வாய்மை*
*குறிப்படரல் தீச்சொற்களோடு - மொழிப்பட்ட*
*காய்ந்து விடுதல் களைந்(து) உயக் கற்றவர்*
*ஆய்ந்து விடுதல் அறம்*

*(சிறுபஞ்சமூலம்)*

என்று அறம் பற்றி சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகிறது.

### 7. அறத்தின் ஐந்து பண்புகள்

1. தீச்சொற்களைச் சொல்லாமல் இருத்தல்.
2. வழிப்பறி கொள்ளையில் ஈடுபடாமல் இருத்தல்.
3. பிறர் பொருளைக் களவு செய்யாமல் இருத்தல்.
4. மெய்ம்மை தவறாமல் இருத்தல்.
5. அறிவுரைகளைக் கேட்டு அவற்றைக் கடக்காமல் இருத்தல்.

இந்த ஐந்து செயல்களையும் அரசன் முதல் சாதாரண மனிதன் வரை கடைபிடிக்க வேண்டிய நல்லறங்களாகும். இருப்பினும், இவற்றை ஆராய்ந்து விட வேண்டியவற்றை விட்டு விடுதல் என்பதே அறத்திற்கான கோட்பாடு ஆகும்.

## 4.4 சங்க காலத்தில் தமிழகத்தில் எழுத்தறிவும், கல்வியும்

### 4.4.1 சங்ககாலத்தில் கல்வி

சங்ககாலத் தமிழர்கள் கல்வியின் சிறப்பை நன்கு உணர்ந்திருந்தனர். மனித வாழ்வினை மேம்படுத்தி நல்ல ஒழுக்கத்தையும், மனவலிமையையும், சிறந்த அறிவையும், கொடுப்பது கல்வியே ஆகும். சங்ககாலத்தில் தமிழ் ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் விளங்கியிருந்திருக்கிறது. சங்ககாலக் கல்வி முறையிலும் தமிழுக்கு உயர்வான இடம் இருந்துள்ளது.

### கல்வியை கற்பிக்க அமைப்புகள்

தமிழைக் கற்பிக்க, சமயங்களைக் கற்பிக்க, அறங்களைக் கற்பிக்க, இவற்றை வழிநடத்த பல அமைப்புகள் இருந்துள்ளன. அவை,

1. சங்கம்
2. மன்றம்
3. சான்றோர் அவை
4. அறம் கூர் அவையம்
5. சமணப் பள்ளி
6. பௌத்தப் பள்ளி
7. அந்தணர் பள்ளி

போன்ற பல்வேறு அமைப்புகள் சங்ககாலத்தில் கற்பித்தல் பணியைச் செய்து வந்துள்ளன.

## 1. சங்கம்

சங்கம் என்ற அமைப்பு பலர் கூடி விவாதிக்கும் பாங்குடையது. இதில் புதிய சொல் படைக்கும் ஆற்றல் ஆராயப்பட்டது என்பதை சங்கப் பாடல்கள் பதிவு செய்துள்ளன.

**சான்று**

*"நிலனாவிற்றி இதரிதரூஉம் நீண்மாடக் கூடலார்*
*புலனாவிற் பிறந்த சொற்புதிது உண்ணும் பொழுதன்றோ"*

*(கலித்தொகை 35:17-19)*

இப்பாடலில் சங்கத்தில் நடக்கும் செயல்பாடுகள் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. புதிய பாடல்கள் அரங்கேறும் இடமாகச் சங்கம் இருந்துள்ளது.

### மதுரையில் தமிழ்ச் சங்கம்

பாண்டிய நாட்டில் மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது என்பதை கீழ்க்கண்ட சிறுபாணாற்றுப்படை பாடல் மூலம் அறிய முடிகிறது.

**சான்று**

*"தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மருங்கின் மதுரை"*

*(சிறுபாணாற்றுப்படை, 66-67)*

இத்தமிழ்ச் சங்கத்தில் புதுச்சொல் புணர்க்கும் தன்மையில் செயல்பாடுகள் இருந்துள்ளன என்பதும் உறுதியாகின்றது. சங்கத்தில் தமிழ்ப் புலவர்கள் ஒன்றாய் இருந்து தமிழ் ஆழ்ந்த இடம் என்பதன் காரணமாக அதுவே முதலில் தோன்றிய தமிழமைப்பு, தமிழ்க் கற்றல் அமைப்பு என்பது கருதத்தக்கது.

இறையனார், களவியல் உரையில் முச்சங்கங்கள் இருந்ததை சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

i) முதற் சங்கம் (அ) தலைச்சங்கம்

ii) இடைச்சங்கம்

iii) கடைச்சங்கம்

## 2. பள்ளி (அ) மடம்

பள்ளி என்ற நிலையில் தமிழ் வளர்த்த அமைப்புகள் சில செயல்பட்டு வந்தன. பல இடங்களில் மடங்களில் பாடசாலைகள் உண்டாயின. பள்ளியெனும் சொல் ஜைன மடங்களுக்கும், பாடசாலைகளுக்கும் பொதுவான பெயர் சமண சமயத்தவர்கள், உண்டு, உறையும் இடங்களாகும். இவ்விடங்கள் பகல் பொழுதுகளில் கற்பிக்கும் மையங்களாக விளங்கியுள்ளன. உண்டு உறைந்து கற்கும் வழக்கமும் இங்கு இருந்துள்ளது.

### பள்ளிகளின் வகைகள்

1. பௌத்தப் பள்ளி
2. அந்தணர் பள்ளி
3. அமண் (சமணர்) பள்ளி

ஆகிய பள்ளிகள் இருந்தனவாகக் குறிக்கப்படுகின்றன.

### i) பௌத்தப் பள்ளி

மதுரைக்காஞ்சி என்ற நூலில் பௌத்தப் பள்ளி பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது.

**சான்று**

> "காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
> பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சி
> சிறந்து புறங்காக்கும் கடவுள் பள்ளியும்" (மதுரைக்காஞ்சி,461-467)

பேரிளம் பெண்கள் தன் குழந்தைகளைத் தவற விட்டுவிடாதபடி பௌத்தப் பள்ளிக்குள் நுழைந்து, பூவும், புகையும் இட்டுச்சென்றனர் என்ற செய்தி இப்பாடலடியில் இடம் பெற்றுள்ளது. இப் பௌத்தப் பள்ளியில் கல்விச் செயல்பாடுகளும் நிகழ்ந்துள்ளன.

### (ii) அந்தணர் பள்ளி

சங்ககாலத்தில் இருந்த அந்தணர் பள்ளியில் வேதம் விளக்கப் பாடப் பெற்றுள்ளது என்று கீழ்காணும் மதுரைக்காஞ்சி பாடல் சொல்கின்றது.

**சான்று**

> "சிறந்த வேதம் விளங்கப்பாடி
> விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து"
>
> (மதுரைக்காஞ்சி, 268 - 274)

### (iii) அமண் பள்ளி

**சான்று**

> "வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்து
> பூவம் புகையும் சாவகர் பழிச்சக்
> சென்ற காலமும் வருஉம் அமயமும்"
>
> (மதுரைக்காஞ்சி, 475 - 488)

அமண் பள்ளியில் சாவகர் மலர், புகை கொண்டு வழிபட்டனர். இப்பள்ளியில் கற்றறிந்த அறிஞர்கள் பலர் அங்கு இருந்தனர். செம்பு போன்ற சுவரில் பல ஓவியங்கள் பதிய வைக்கப் பெற்றிருந்தன. இதன்மூலம் அக்காலத்தில் சமண சமயப் பள்ளிகள் ஆளுமை பெற்றிருந்தன என்பது தெரிய வருகின்றது.

### 3. மன்றம்

மன்றம் என்பது பொது இடத்தில், மரத்தடியில் உள்ள மேடை அல்லது திண்ணையே. பள்ளி என்பது மன்றத்தின் ஒரு பகுதியாக சங்ககாலத்தில் இருந்துள்ளது. மன்றமே பிறகு திண்ணை பள்ளிக்கூடமாக மாறியதென்று தோன்றுகிறது.

பள்ளி போன்ற அமைப்புகளில் கற்ற பாடங்களை ஒருநாள் மன்றத்தில் ஏற்றி சங்ககால மக்கள் உயர்வு கண்டுள்ளனர். மன்றத்தில் கல்விச்சிறப்பு, போர்ப்படை பயிற்சி, நாடகம் போன்றவை அரங்கேறியுள்ளன. இவ்வாறு பல கலைகள் அரங்கேறும் இடமாக மன்றம் இருந்துள்ளது.

**சான்று**

***"அன்னாய் இவன் ஓர் இளம் மாணாக்கன்***
***தன் ஊர் மன்றத்து என்னன் கொல்வேர்?"*** *(குறுந்தொகை,32)*

இப்பாடலில் உள்ள இளம் மாணாக்கன் ஊரில் உள்ள மன்றத்தில் படித்ததை சுட்டிக்காட்டுகிறது.

சங்ககாலத்தில் ஊர் பொது மன்றங்களில் பலா, வேம்பு முதலிய மரங்களின் நிழலில் பாணர், பொருநர் முதலிய இரவலர்கள் வந்து தங்குதலும், அந்த மரங்களில் தம் இசைக்கருவிகளைத் தொங்க விடுதலும் மரபாகும் என்பதை கீழ்வரும் புறநானூற்று பாடல் விளக்குகிறது.

**சான்று**

***மன்றப் பலவின் மால்வரை பொருந்தியென்*** *(புறம், 374 - 15)*

***மன்ற வேம்பின் ஒண் குழை மலைத்து*** *(புறம், 79:2)*

இதன்மூலம் ஊர் பொது மன்றங்களில் பலர் கூடி வாதிடவும், கல்வி கற்கவும், பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிய முடிகின்றது.

## 4. சான்றோர் அவை

சான்றோர் அவை என்பது செயல்களை சீர்தூக்கிப் பார்க்கும் அவையாக இருந்துள்ளது. மன்னனுக்கு நாற்பெருங்குழு, காவிதிப் பட்டம் பெற்றோர், அறங்கூர் அவையம், ஆகியன அறக்கல்வியைப் போதித்துள்ளன.

## 5. தனிமனித கற்பித்தல்

தனி மனிதர்கள் சிலரும் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியுள்ளனர்.

**சான்று**

### (i) நாலை கிழவன் நாகன்

*"தோலா நல் இசை நாலை கிழவன்*
*பருந்து பசி தீர்க்கும் நற்போர்த்*
*திருந்து வேல் நாகற் கூறினர் பலரே"*

*(புறநானூறு, 179)*

இப்புறநானூற்றுப் பாடலில் நாலை கிழவன் நாகன் என்பவனின் சிறப்பினை எடுத்துரைக்கிறது. இவன் மன்னருக்கு படைத்தலைவனாகவும், அறிவு உதவி செய்பவனாகவும் இருந்துள்ளான்.

### (ii) கபிலர்

கபிலர் ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் கற்பிக்க பாடியது குறிஞ்சிப்பாட்டு என்ற குறிப்பால் அரசர் ஒருவருக்கு புலவர் ஒருவர் தமிழ் கற்பித்துள்ளார் என்பது தெரிய வருகின்றது.

### வித்தியாப்பியாசம்

முதன் முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும்பொழுது தாய், தந்தையர், பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தார்கள். பிள்ளைகளை பள்ளிகளில் சேர்க்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப்பட்டது.

ஏட்டின் மீது மஞ்சள் பூசி பூசித்து பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வர். உபாத்தியார் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்வான். இப்படி உபாத்தியார் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை "முறை வைப்ப" தென்று கூறுவர்.

### ஊதியமில்லா கல்வி உருப்படாது

சங்ககாலத்தில் ஆசிரியருக்கு பெரும் பொருள் கொடுத்தும் பல உதவிகள் செய்தும் அவர் கோபப்படாமல் இருக்கும்படி அடக்கத்துடன் கல்வி கற்றனர்.

### கல்வியால் பெற்றோர் பெருமை

பெற்ற தாயும் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கும் மகனையே பெரிதும் விரும்புவாள் என்று கீழ்காணும் புறநானூற்று பாடல் கூறுகிறது.

சான்று

பிறப்போரன்ன வுடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலற் தாயுதனந் திரியும் *(புறம், 183:3,4)*

பெற்றோரைப் பெருமைப்படுத்தும் நிலை கல்விக்குண்டு. எனவே பிச்சை எடுக்கும் நிலை வந்தாலும் கூட ஒருவன் கற்க வேண்டும் என்று கூறுகிறார் அதிவீர ராமபாண்டியர்.

சான்று

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே *(வெற்றி வேற்கை, 15)*

## 4.4.2 சங்ககாலத்தில் எழுத்தறிவு

சங்ககாலத்தில் முதன் முதலாக எழுத்துக்களாக வட இந்தியாவில் கி.மு.3-ஆம் நூற்றாண்டு அளவில் மௌரிய பேரரசர் அசோகர் காலத்தில் வழக்கில் இருந்த பிராமி என்னும் எழுத்து வகைதான். அக்கால

கட்டத்தில் தமிழகத்தில் வழக்கிலிருந்த எழுத்து வகை அசோகருடைய பிராமியிலிருந்து மாறுபட்ட எழுத்தாகவும் தமிழ் மொழிக்கே உரிய எழுத்தாகவும் விளங்கியமையால் அதனை தமிழி என அறிஞர்கள் அழைத்தனர்.

### தமிழி, தமிழ் பிராமி

வட இந்திய பிராமி எழுத்துக்களுக்கும், சங்க கால தமிழகத்தில் வழக்கத்தில் இருந்த எழுத்துக்களுக்கும் உருவ அளவில் ஒற்றுமை இருப்பினும் பல வேறுபாடுகள் உள்ளன. தமிழ் எழுத்துக்களில் உள்ள ழ, ள, ற, ன வடிவங்கள் வட இந்திய பிராமியில் இல்லை. எனவே தமிழகத்தில் கிடைக்கும் பிராமி எழுத்துக்களை, வட இந்திய பிராமியிலிருந்து வேறுபடுத்தி உணர்த்தும் பொருட்டு இவை தமிழி (அ) தமிழ் பிராமி என்று அழைக்கப்படுகிறது. இதை நாம் சங்க கால தமிழ் எழுத்துக்கள் என்றே அழைக்கலாம்.

### கல்வெட்டுகளில் தமிழி

தமிழகத்தில் கிடைக்கும் கல்வெட்டுகளில் தமிழ் பிராமி எழுத்துக்களே இடம்பெறுகின்றன. இந்த எழுத்துக்கள் சமணர்கள் வாழ்ந்த குகைகளிலேயே பெரும்பாலும் காணக் கிடைக்கின்றன. சமணக்குகைகளில் எழுத்துக்கள் காணப்பட்டாலும், சமண சமயத்தைப் பற்றியோ அதன் கொள்கைகள் பற்றியோ குறிப்பிடவில்லை. ஆனால் அமைத்துக் கொடுத்தவரின் பெயர், ஊர், காலம் இவைகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன.

பாறைகளில் மட்டுமின்றி நடுகற்கள், மட்பாண்டங்கள், காசுகள், முத்திரைகள், மோதிரங்கள் இவற்றிலும் இவ்வெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

**சான்று**

### ரிஷப தேவரின் மகள்களின் பெயர்

சமண சமயத்தின் ரிஷப தேவருக்கு இரு மகள்கள் என்றும், அவற்றுள் ஒருத்தி பெயர் "சுந்தரி" என்றும், இன்னொரு மகளின் பெயர்

"பிராமி" என்றும் கூறியுள்ளனர். இதில் சுந்தரி என்பது மொழியையும், பிராமி என்பது எழுத்தையும் குறிப்பதாகும் என்ற கருத்து நிலவுகிறது.

## பிராமி மற்றும் கரோஷ்டி வடிவங்கள்

வடஇந்தியாவில் காணப்படும் கல்வெட்டுகள் "பிராமி" மற்றும் "கரோஷ்டி" வரிவடிவங்களில் எழுதப்பட்டுள்ளன.

**பிராமி:** இடமிருந்து வலமாக எழுதும் எழுத்து முறை பிராமியாகும்.

**கரோஷ்டி:** வலமிருந்து இடமாக எழுதும் எழுத்து முறை கரோஷ்டி ஆகும்.

**தமிழி:** தமிழி வரிவடிவமும், வட்டெழுத்து வரி வடிவமும், பிராமியை ஒத்திருப்பதால் இதை பிராமியிலிருந்து தோன்றியதாகவே கருதப்படுகிறது.

## குக்கிராமங்களிலும் தமிழர்களின் எழுத்தறிவு மிகுதி

சங்க இலக்கியங்களில் ஆநிரை மீட்டல், நிரை கொள்ளல், ஊரைப் பகைவரிடமிருந்து காத்தல், அதில் இறக்கும் வீரர்களுக்கு நடுகல் எடுப்பது தமிழர் மரபு. இவர்களைப் பற்றி மக்கள் படித்து அறிய நடுக்கல்லில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தமிழகத்தில் குக்கிராமங்களிலும் தமிழர்கள் எழுத்தறிவு மிகுதியாக பெற்றிருந்தனர் என்பது விளங்குகிறது.

**சான்று**

புலிமான் கோம்பை, தாதாப்பட்டி, பொற்பனைக் கோட்டை ஆகிய இடங்களில் கிடைத்த நடுகற்களே இந்தியாவில் கிடைத்த தொன்மையான நடுகற்கள். இவற்றின் காலம் கி.மு.6ஆம் நூற்றாண்டாகும்.

## வட இந்தியர்களின் எழுத்தறிவு குறைவு

கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் அசோகப் பேரரசர் தனது பௌத்த மதக் கொள்கையைச் சொல்வதற்கு கல்வெட்டுகளை அமைத்து அவற்றைப் படித்து சொல்வதற்காக அதிகாரிகளை நியமித்ததாக கல்வெட்டுகளில்

குறிப்பிட்டிருக்கின்றார். இதிலிருந்து வட இந்தியர்களின் எழுத்தறிவு மிகக் குறைவாகவே இருந்துள்ளது.

**சான்று**

இந்தியாவிற்கு வருகை புரிந்த "மெகஸ்தனிஸ்" வட இந்திய மக்கள் எழுத்தறிவு அற்றவர்களாகவே பெரும்பாலும் இருந்தனர் எனக் குறிப்பிடுகின்றார்.

* இதிலிருந்து அசோகன் காலத்திற்கு முற்பட்ட 3 நூற்றாண்டுகளுக்கும் முன்பாகவே தமிழகத்தில் எழுத்தறிவு உன்னத நிலையில் இருந்து உள்ளதை நாம் அறிகிறோம்.
* இவ் வரலாற்றை பார்க்கும் பொழுது "தமிழி" எனப்படும் தமிழி - பிராமி எழுத்துக்களே இந்தியாவில் தொன்மையான எழுத்து வகை என்பது தெரிகிறது.
* இதன் மூலம் தமிழர்கள் 2600 ஆண்டுகளுக்கு முன்பே எழுத்தறிவில் சிறந்து விளங்கினர் என்பது புலப்படுகிறது.
* இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட 1 லட்சம் கல்வெட்டுகளில் 60,000 கல்வெட்டுகள் தமிழ் எழுத்தில் உள்ளன.

### எழுத்தின் வடிவம்

எழுத்துக்களின் உருவங்கள் பல காலமாக மாறாமல் இருந்து வந்தன. புள்ளி, கால், கொம்பு, விலங்கு முதலியவை வரி எழுத்துக்களின் உறுப்புக்கள். சங்ககாலத்தில் பெரியோர்கள், சான்றோர்களின் அறிவு வளர்ச்சியால், கற்களில் எழுதப்பட்ட எழுத்துக்களின் வடிவங்கள் மாறி மாறி, ஓலைச்சுவடிகளில் எழுத்தாணிகளைக் கொண்டு எழுத ஆரம்பித்து, இன்று காகிதத்தில் எழுதுகின்றனர்.

### தரையில் எழுதுதல்

எழுத்துக்கள் வரிசையாகவும், நன்றாகவும் அமைய உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் விளம்புவார்கள். பிறகு தாமே எழுதி எழுதிப் பழகுவார்கள்.

## சுவடிகள்

காலம் மாற, மாற எழுத்து முறைகளும் மாறத் தொடங்கின. கல்வெட்டுகளில் எழுத ஆரம்பித்து, பிறகு ஓலைச்சுவடிகளில் எழுத ஆரம்பித்தனர்.

பனை ஓலையை ஒழுங்காக நறுக்கித் துளையிட்டு மேலே பனை மட்டையின் காம்பை நறுக்கிக் கோர்ப்பார்கள். மரத்தாலும் (அ) செப்புத்தகட்டாலும் சட்டம் செய்து கோர்ப்பதும் உண்டு. அந்தச் சட்டங்களின் மேல் வர்ண மையினால் பல வகையான சித்திரங்கள் எழுதுவதுண்டு. இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக்கம்பி (அ) மூங்கிற் குச்சியை செருகிக் கட்டுவர். அதற்கு "நாராசம்" என்று பெயர்.

சுவடியைக் கோர்க்கும் கயிற்றின் ஒரு தலைப்பில் தடையாக பனை ஓலையை ஈர்க்கோடு கிளிமூக்குப் போல கத்தரித்து அமைப்பார்கள் அதற்கு "கிளி மூக்கென்று" பெயர்.

## எழுத்தாணிகள்

ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணிகள் பல வகைகள் உண்டு. அவை,

* மடக்கெழுத்தாணி
* வாரெழுத்தாணி
* குண்டெழுத்தாணி

பொதுவாக, எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவதுண்டு. ஒரு பக்கம் வாருவதற்குக் கத்தியும், மறுபக்கம் எழுதுவதற்கு எழுத்தாணியும் அமைந்ததைப் பார்த்தே பேனாக் கத்தி என்ற பெயர் வந்ததென்று தோன்றுகிறது.

ஒரு பக்கத்தில் இரண்டு கத்தியும் மற்றொரு பக்கம் எழுத்தாணியும் உள்ள மடக்கெழுத்தாணிகளும் இருந்துள்ளன.

## மையாடல்

சுவடிகளில் உள்ள எழுத்துக்கள் செவ்வனே தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளியிலைச்சாறு (அ) ஊமத்தையிலைச் சாறு, மாவிலைக்கரி, கர்ப்பைக்கரி முதலிவற்றைக் கூட்டிச் செய்த மையை அதில் தடவுவர். அந்த மை எழுத்துக்கள் விளக்கமாகக் காட்டுவதோடு கண்ணுக்கும் குளிர்ச்சியைத் தரும். இங்ஙனம் மைத்தடவி ஓலைச்சுவடிகளை வாசிக்கத் தொடங்குவதனால் அக்ஷரப் பியாசத்தை "மையாடல் விழா" என்பர்.

## ஏடெழுதும் வழக்கம்

ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துக்களாக 20 - 30 வரி வரையில் எழுதுவதற்குரிய மெல்லிய எழுத்தாணிகள் இருந்தன. நாம் இக்காலத்தில் காகிதத்தில் எழுதுவதைப் போன்ற வேகத்தோடே ஓலையில் (ஏட்டில்) எழுதுவதுண்டு. மாணவர்கள் நன்றாக எழுத வேண்டும் என்று ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களை தனித்தனியே ஓலைகளில் (ஏடுகளில்) தாம் மேலே எழுதி அதைப் போல் எழுதி வரச் சொல்வார்கள். இதற்குச் "சட்டமென்று" பெயர்.

சுவடிகளை வைப்பதற்கும் எடுத்து செல்வதற்கும் பயன்படும் கருவிக்குத் "தூக்கு" என்று பெயர். அதனை "அனச்" என்றும் சொல்வதுண்டு.

## காகிதத்தில் எழுத்து பழக்கம்

காலம் மாற, மாற எழுதும் பழக்கத்திலும் மாறுதல் ஏற்பட்டது. ஓலைச்சுவடிகளில் எழுதியவர்கள் பிறகு காகிதத்தை தயாரித்து எழுதத் தொடங்கினார்கள். முதலில் கரிக்குச்சியால் எழுதியவர்கள் பிறகு பேனாவை கண்டுபிடித்து பயன்படுத்தினர்.

## 4.5 சங்ககால நகரங்களும் துறைமுகங்களும்

### 4.5.1 சங்ககால நகரங்கள்

சங்ககால நகரங்கள் பெரும்பாலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகத் தலங்களாக செயல்பட்டுள்ளன என்பதற்கு அனேக வரலாற்றுச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. இவற்றுள் உறையூர், காஞ்சிபுரம், கரூர் போன்ற பெரு நகரங்கள் அயல்நாட்டு வாணிகத்தை பெருக்கிட பயன்பட்டிருக்கின்றன. இவ்விடங்களிலிருந்து உரோமானியப் பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவர்கள் கடற்கரையோரப் பகுதிகளிலும் தொடர்பு வைத்திருந்தார்கள் என்பதற்கு இப்பானை ஓடுகள் சான்றுகளாகும்.

#### 1. உறையூர்

தமிழகத்தில் உள்ள பழமையான ஊர்களில் ஒன்று உறையூர். இது ஒரு தனிப்பெரும் வியாபார நகரமாகவே திகழ்ந்திருக்கிறது. உறையூர் முற்காலச் சோழர்களின் தலைநகரமாகும். இதை உறந்தை, கோழியூர், அரகரு என்ற பெயரில் குறிப்பிட்டுள்ளனர்.

கீழக்கடற்கரையோரப் பகுதிகளில் கிடைத்த முத்துக்கள் உறையூருக்குக் கொண்டுவரப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டதாக அறிகிறோம். உறையூரில் தயாரிக்கப்பட்ட மசிலின் துணிகள் உலகப் பிரசித்திப் பெற்றவையாகும். பருத்தி ஆடைகள் உற்பத்தியில் இந்நகரம் தலைச்சிறந்து விளங்குகிறது.

#### 2. காஞ்சிபுரம்

ஆயிரம் கோயில்களில் நகரமான காஞ்சிபுரம் தென்னிந்தியாவின் மிகவும் பழமையான நகரங்களில் ஒன்றாகும். கி.பி.4-6 ஆம் நூற்றாண்டு வரை பல்லவர்களின் தலைநகராக இது விளங்கியது. கலையிலும் தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளின் கல்வியிலும் இது சிறந்து விளங்கியது. கி. மு. 2ஆம் நூற்றாண்டிலேயே காஞ்சி பதஞ்சலி முனிவரால் குறிப்பிடப்படுகிறது.

காஞ்சி பட்டாடைகளுக்கு மிகவும் புகழ்பெற்றது. இங்கு தயாரிக்கப்பட்ட பட்டாடைகளை சீனர்கள் பெரிதும் விரும்பி வாங்கிச் சென்றிருக்கின்றனர்.

### 3. பட்டுக்கோட்டை

தஞ்சைக்கு அருகில் உள்ள பட்டுக்கோட்டை சங்ககாலத்தில் பட்டு உற்பத்திக்கு சிறந்து விளங்கிய முக்கியமான நகரமாகும். ஏனெனில் இவ்விடத்தில் கி.மு.3-10ஆம் நூற்றாண்டுகளில் சீனக் காசுகள் புழக்கத்தில் இருந்துள்ளன, இதற்கு காரணம் பட்டாடைகளாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

### 4. கொங்கு நாடு

கொங்கு நாடும் சங்ககாலத்தில் அந்நிய நாட்டு வணிக வளர்ச்சிக்கு மிகவும் உதவி புரிந்திருக்கின்றன. ஏனெனில் இங்கு அழகிய கண்ணாடி போன்று மிளிரும் வைரக்கற்கள் அடங்கிய சுரங்கங்கள் இருந்திருக்கின்றன. இக்கற்களில் குறிப்பிடத்தக்கவை ‘பெரில்’ என்னும் ஒரு வகை கல்லாகும். இவற்றைக்கொண்டு மாலைகளாக செய்து அணிந்து கொள்ள பெரிதும் விரும்பினர். எனவே இவை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. அதற்குச் சான்றாக ரோமானியத் தங்க காசுகள் இப்பகுதியில் ஏராளமாக கிடைத்துள்ளதைக் குறிப்பிடலாம்.

### 5. மாமல்லபுரம்

மாமல்லபுரம் கி.பி. 630-668 கால கட்டத்தில் பல்லவ மன்னன் நரசிம்மவர்ம மன்னனால் உருவாக்கப்பட்ட கடற்கரை நகரமாகும். இங்குள்ள கட்டடங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

i) குடைவரைக் கோயில்கள் (அ) மண்டபங்கள்

ii) ஒற்றைக்கல் கோயில்கள் (அ) இரதங்கள்

iii) கட்டுமானக் கோயில்கள்

இதைத் தவிர புடைப்புச் சிற்பத் தொகுதிகள் வெளிப்புறத்திலும் கோவில்களின் உட்புறத்திலும் காணப்படுகின்றன.

### 6. அரிக்கமேடு

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த இந்த ஊர் சோழர்கள் காலத்தில் ஒரு மீனவர் கிராமமாக இருந்தது. இங்கிருந்து ரோம் நகருடன் வாணிபம் நடைபெற்றது என்று அகழ்வாராய்ச்சி தெரிவிக்கின்றது.

### 7. கொடுமணல்

ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் காவிரி ஆற்றில் கலக்கும் நொய்யல் ஆற்றின் வடகரையில் இன்றைய கொடுமணல் அமைந்துள்ளது. இதன் அமைவிடம் சங்ககாலச் சேர நாட்டின் தலைநகரமான கரூரை, மேற்குக் கடற்கரையுடன் இணைக்கும் பண்டைய வணிகப் பாதையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இன்றைக்கு முக்கிய தொல்லியல் நகரமாக அறியப்படும் கொடுமணல் சங்க காலத்தில் 'கொடுமணம்' என்று அழைக்கப்பட்டது. இவ்விடம் பற்றிப் பதிற்றுப்பத்து என்னும் சங்க நூலில் குறிப்புகள் உள்ளன.

### 8. உறையூர்

தமிழ்நாட்டில் உள்ள பழமையான நகரங்களில் ஒன்று உறையூர். இது முற்காலச் சோழர்களின் தலைநகரமாகும். சங்க காலத்தில் இதை உறந்தை எனவும், கோழியூர் எனவும் இதனை அழைத்தனர்.

### 9. கரூர்

சங்க கால சேர நாட்டின் தலைநகரான கரூரை சேரன், செங்குட்டுவன் ஆட்சி செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிறகு பாண்டியர்கள் பல்லவர்கள் மற்றும் சோழர்களாலும் ஆட்சி செய்யப்பட்டது. ஆங்கிலேயருக்கு எதிரான போரில் மைசூரில் உயிர் நீத்த வீரர்களுக்கு கரூர் அருகே உள்ள ராயனூரில் ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்தியுள்ளனர்.

### 10. மதுரை

சங்ககால பாண்டியர்கள், சோழர்கள், மதுரை சுல்தான், விஜயநகரப் பேரரசு, மதுரை நாயக்கர்கள், ஆங்கிலேயர்கள் போன்றோர் மதுரையை ஆண்டுள்ளனர்.

சுமார் 2500 ஆண்டுகள் பழமையான சங்ககால தமிழ் நகரங்களுள் முக்கியமானது மதுரை ஆகும். கி.மு.4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.2ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில், தமிழ் மொழி அறிஞர்களைக் கொண்டு மூன்றாம் தமிழ்ச் சங்கம் அமைக்கப்பட்டு தமிழை வளர்த்த பெருமை உடைய நகரம் மதுரை.

## 4.5.2 சங்ககால துறைமுகங்கள்

சமூகம் வளர்ச்சியடைய வாணிகத் தொடர்புகள் அவசியம் என்பதை சங்ககாலத்திலேயே தமிழர்கள் அறிந்திருந்தனர். தமிழர்கள் புதிது, புதிதாய் கண்டுபிடிப்புகளில் ஆர்வம் உள்ளவர்கள். மேற்கே கிரீஸ், ரோம் முதல் எகிப்து, சீனம் வரையில் கடல் கடந்து வாணிகம் செய்து பிழைப்பு நடத்தினர். மேலும் பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா ஆகிய நாடுகளுடன் வாணிகத் தொடர்பில் இருந்தனர்.

ஏலம், இலவங்கம், இஞ்சி, மிளகு, பொன், வெள்ளி, யானைத் தந்தம், குரங்குகள், மயில் தோகை, அகில் மரங்கள், ரத்தினங்கள் ஆகியன முக்கிய ஏற்றுமதி பொருட்களாக இருந்தன.

### துறைமுகங்களும் அதன் அமைவிடங்களும்

சங்ககாலத்தில் இந்தியத் துறைமுகங்கள் கிழக்கு கடற்கரை மற்றும் மேற்கு கடற்கரைகளில் அமைந்திருந்தது. அவைகளின் மூலமே வர்த்தகம் நடைபெற்றுள்ளது. கடல் துறைமுகங்களை சங்க காலத்தில் இரண்டு வகையாகப் பிரித்து கையாண்டிருக்க வேண்டும்.

i) நிர்வாக வசதிக்காக பயணத் துறைமுகங்கள்

ii) சரக்குத் துறைமுகங்கள்

எனத் தனித்தனியேப் பிரித்துக் கையாண்டிருப்பர் என தெரிகிறது.

## 1. காவிரிபூம்பட்டினம்

காவிரி ஆறு வங்காள விரிகுடாவில் கலக்கும் இடத்தில் அமைந்துள்ள சங்ககாலத் துறைமுகமாகும். இது சோழர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. காவிரிப்பூம்பட்டினத்திற்கு தென்கிழக்காசிய மட்டுமல்லாமல் மற்ற நாடுகளில் இருந்தும் என்னென்ன பொருட்கள் வந்து இறங்கின என்பதை கீழ்க்காணும் பட்டினப்பாலை வரிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**சான்று**

**"நீரின் வந்த நிமிர் பரப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூட்டையும்** *(பட்டினப்பாலை,185)*

வாணிகம் நிமித்தமாக மணிமேகலை "யவணர்கள்" வந்து வாழ்ந்ததாக பட்டினப்பாலைக் குறிப்பிடுகிறது. யவண இருக்கை என அழைக்கப்பட்டதாக சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது (சிலம்பு 5-10). இந்த நகரை உருவாக்கிய ரோமானிய நாட்டு சிற்பிகளை யவணத் தச்சர் என அழைக்கப்பட்டனர்.

### ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்

உயர்வகை குதிரைகள், மிளகு, சந்தனம், முத்து, பவளம், வைரக்கற்கள், பொன் ஆகியவை இத்துறைமுகத்தின் வழியே வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டது என சங்க இலக்கியம் கூறுகிறது.

கங்கை, காவிரி வளத்தால் விளைந்த பொருட்கள், உற்பத்தி செய்த உலோகப் பொருட்கள், பிற இடங்களில் இருந்து பெறப்பட்ட பல அரிய வகைப் பொருட்கள் இத்துறை முகத்திற்கு வந்து சென்றதை அறிகிறோம்.

### வரிவிதிப்பு

கடல் வாணிகம் மிகச் செழிப்பாகவும், எப்போதும் சுறுசுறுப்பாகவும் இயங்கிக் கொண்டிருந்ததையும் நாம் அறியலாம். இதன் மூலம் நாட்டிற்கு

நல்ல வருமானம் கிடைத்திருக்கின்றது. ஏற்றுமதி, இறக்குமதி வரி வசூல் செய்யப்பட்டிருப்பதையும் நாம் அறிகிறோம்.

சுங்கவரி விதித்திருந்ததைப் பட்டினப்பாலை பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. துறைமுகத்தின் மூலம் நிறைய வருவாய் பெற்றதோடு, புகார் நகரம் செல்வ செழிப்போடு இருந்திருப்பதையும் நம்மால் உணர முடிகிறது.

### கலங்கரை விளக்கம்

இத்துறை முகத்திற்குச் சிறிய படகுகள் முதல், பெரிய பல வகையான கப்பல்களும் வந்தன. இரவில் வந்து செல்லும் கப்பல்களுக்கு வழிகாட்டும் விதமாக கப்பல்களுக்கு திசையினை உணர்த்திக் கலங்கரை விளக்கம் இருந்ததை சிலப்பதிகாரம் பாடல் வரியின் வாயிலாக அறியலாம்.

**சான்று**

*"இலங்கு நீர், விரைப்பானர் கலங்கரை விளக்கம்" (சிலம்பு.212:6)*

### 2. கொற்கை

கொற்கை துறைமுகத்தில் பாண்டியர்களின் ஆட்சியில் வாணிகம் சிறந்து விளங்கியுள்ளது. மேலும் இத்துறைமுகத்தின் வாயிலாக சுங்கவரியாக மிகுந்த வருமானம் ஈட்டியுள்ளனர். அதனால்தான் பாண்டியர்கள் ஆட்சிக் காலத்தில் 25க்கும் மேலான துறைமுகங்களை கையாண்டுள்ளனர்.

### ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்

முத்து ஏற்றுமதி மிகச் சிறப்பாக நடந்துள்ளது.

### பழுது பார்க்கும் தொழில்

ஏற்றுமதி, இறக்குமதியைத் தவிர்த்து நாவாய்களைப் பழுது பார்க்கும் தொழிலும் அங்கு நடைபெற்று உள்ளது. கப்பல்களைத் தரைப்பக்கம் அல்லது ஆழம் குறைவான பகுதிக்கு நகர்த்தி வந்து கால்வாய்களை

அமைத்து அதில் வைத்து பழுது பார்க்கும் வேலைகளையும் செய்துள்ளனர்.

### பல்வேறு துறைமுகங்கள்

பாண்டியர்கள் காலத்தில் கொற்கையில் 3 விதமான துறைமுகங்களை வைத்திருந்தனர்.

i) மீன்பிடித் துறைமுகங்கள்

ii) வெளிநாட்டு சரக்குகளைக் கையாளும் துறைமுகங்கள்

iii) பயணத் துறைமுகங்கள்

மீன் பிடித்து விற்பதற்கு தனித் துறைமுகங்கள் அமைத்திருந்தனர். மேலும், பிடித்த மீனை விற்றது போக மீதியை உப்பிலிட்டு காய வைத்திருந்தனர்.

### 3. முசிறி

கேரளக் கரையோரமுள்ள முசிறி நகரம் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள சங்ககால சேரர்களின் துறைமுகமாகும். கி.பி. 74-132 காலத்தில் சேரமான் இமயவர்மன் நெடுஞ்செழியன் காலத்தில் இந்நகரம் துறைமுகமானது.

அரபு நாடுகளில் இருந்து இந்தியா வந்த கப்பல்கள் முசிறியில் வந்து இறங்கின. கடற்கொள்ளையர்களிடமிருந்து வணிகர்களை காப்பாற்ற சேரமன்னன் கேரளக் கடற்பகுதியை ஆழப்படுத்தி உதவி செய்தான் என்று கி.பி. 150-இல் தாலமி எழுதிய குறிப்பு சொல்கிறது.

### ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்

செங்கல் கட்டிடங்கள், ரோம நாட்டு மது ஜாடிகள், தட்டுகள், கோப்பைகள், பச்சை வைரம் பதித்த ஜாடி வகைகள், இரும்பு கத்திகள், சுத்துவுக்கொண்டிகள், சேரர்களின் சதுர, வட்ட தங்க நாணயங்கள் ஆகிய

பொருட்கள் இத்துறைமுகத்தின் வழியே புழங்கியுள்ளன என்பது அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பொருட்களில் இருந்து தெரிய வருகிறது.

### 4. அழகன்குளம்

அழகன்குளம் வைகை ஆறு, வங்காள விரிகுடா கடலில் கலக்கும் இடத்திற்கு அருகில் ராமேஸ்வரத்தில் உள்ள சங்ககாலத் துறைமுகமாகும். பாண்டிய நாட்டின் கிழக்கு மற்றும் மேற்கே உள்ள நாடுகளுடன் தொடர்புக்கு உதவிய மிக முக்கிய துறைமுகம் ஆகும்.

#### ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்

நெல், அரிசி, உப்பு, அவழாகட்டு, பயித்தம் பருப்பு, அவரை, துவரை, ஆமணக்கு, எள், கடுகு, சீரகம், வெங்காயம், புளி, மஞ்சள், மிளகு, சுக்கு, தேன்.

### 5. நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் காவிரி பூம்பட்டினத்தின் அருகே வங்காள விரிகுடாவின் கரையில் உள்ளது. குருவையாறு கடலில் கலக்கும் இடத்தில் இந்த துறைமுகம் அமைந்துள்ளது. சங்க காலம் முதற்கொண்டு, பன்னாட்டு வணிக மையமாக இது திகழ்ந்துள்ளது. கீழை நாடுகளுக்கு அதாவது மலேசியா, சிங்கப்பூர், பர்மா, சீனா, இந்தோனேசியா, ஜாவா போன்ற நாடுகளை சேர்ந்த வியாபாரிகள் இங்கு வந்து வியாபாரம் செய்துள்ளனர். நாகப்பட்டினம் துறைமுகம் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகள் பழமையானது.

#### ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்

வெங்காயம், தானிய வகைகள், வண்ணக் கைவினைப் பொருட்கள் போன்றவை தென்கிழக்காசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

### 6. தொண்டி

சங்ககாலத்தில் இரண்டு தொண்டி துறைமுகங்கள் இருந்தன. ஒன்று சேர நாட்டில் மேற்குக் கடற்கரையிலும், மற்றொன்று பாண்டிய நாட்டில் கிழக்கு கடற்கரையிலும் இருந்தது.

கிழக்கு கடற்கரையிலிருந்து வீசுகிற கடல் காற்றுக்குக் கொண்டல் காற்று என்பது பெயர். பொருட்களை வெளிநாடுகளில் இருந்து ஏற்றிக் கொண்டு வந்த நாவாய்கள் கொண்டல் காற்றின் உதவியினால் தொண்டித் துறைமுகத்துக்கு வந்ததையும், இறக்குமதியான அந்த பொருட்களை தொண்டியிலிருந்து பாண்டியனின் தலைநகரான மதுரைக்கு அனுப்பப்பட்டதையும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

### ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்

அகிற்கட்டை, சந்தனக் கட்டை, பட்டு, சாதிக்காய், இலவங்கம், குங்குமப்பூ, கற்பூரம். இந்த பொருட்கள் அனைத்தும், இந்தோனேசியா மற்றும் சாவக நாடுகளிலிருந்து (கிழக்கிந்திய தீவுகள்) இறக்குமதி செய்யப்பட்டவை.

## 4.6 சங்ககாலத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

சங்க காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிகம் மிகச்சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது. குறிப்புகளிலும் தமிழர்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்தது பற்றிய விரிவான செய்திகள் அடங்கியுள்ளன.

### 4.6.1 உள்நாட்டு வாணிகம்

சங்ககாலத்தில் உள்நாட்டு வாணிகம் பண்டமாற்று முறையில் நடந்தது. ஒரு நிலத்தில் விளையும் பொருட்களை வேறொரு மாநிலத்தில் கிடைக்கும் பொருட்களுக்குப் பதிலாக கொடுத்து வேண்டியவற்றைப் பெற்றார்கள்.

**எடுத்துக்காட்டுகள்**

1. குறிஞ்சி நில மக்கள் தேன், எண்ணெய், விதைகள் போன்றவற்றை நெய்தல் நில மக்களுக்கு கொடுத்து பதிலுக்கு அவர்களிடமிருந்து மது, மீன் எண்ணெய் வாங்கிக் கொண்டார்கள்.

2. மருத நிலத்தவர்கள் அரிசி, கரும்பு போன்றவற்றை குறிஞ்சி நில மக்களுக்கு கொடுத்து பதிலுக்கு அவர்களிடம் இருந்து கள்ளைப் பெற்றுக் கொண்டார்கள்.

3. ஆயர் குலமக்கள் பால், பாலிலிருந்து கிடைக்கும் பொருட்களை கொடுத்து கறவை மாடுகளை வாங்கிக் கொண்டார்கள்.

4. முல்லை நில மக்கள் பால், தயிர் முதலியவற்றைக் கொடுத்து பதிலுக்கு, நெய்தல் நிலத்தவர்களிடமிருந்து மீன், உப்பு முதலியவற்றைப் பெற்றனர்.

### மாட்டு வண்டிகளில் வாணிகம்

உப்பு வணிகர்கள் (உமணர்) உப்பு மூட்டைகளை மாட்டு வண்டிகளில் ஏற்றி தெருத்தெருவாக கூவிக் கூவி விற்றதை சங்க பாடல்களில் இடம் பெற்று இருக்கிறது.

இதைப்போலவே அநேக பொருட்கள் பொதுவாக தினை வகைகள், வெல்லம், மது போன்றவைகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### அங்காடிகள் மூலம் வாணிகம்

பொருட்களை விற்பனை செய்யும் இடத்திற்கு அங்காடி என்று பெயர். சங்ககாலத்தில் பொருட்களை அங்காடி மூலமே விற்பனை செய்துள்ளார்கள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

பகலில் இயங்கும் அங்காடியை 'நாளங்காடி' என்றும் மாலையில் இயங்கும் அங்காடியை 'அல்லங்காடி' என்றும் அழைப்பார்கள்.

### ஆறுகளின் மூலம் வாணிகம்

சங்ககாலத்தில் ஆறுகள் மூலமாக சரக்குகள் எடுத்துச் செல்லவும், எடுத்து வரவும் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. ஆறுகளைக் கடக்கச் சிறிய படகுகளைப் பயன்படுத்தினர். அவற்றை 'புனை' என்றும் அழைப்பர். கடற்கரையோர பட்டினங்களையும் உட்பகுதியில் இருக்க வணிக

மையங்களையும் இணைத்து வைக்க ஆறுகள் பெரிதும் உதவியாக இருந்தன.

## 4.6.2 அயல்நாட்டு வாணிகம்

சங்ககாலத்தில் தமிழகம் பல்வேறு நாடுகளுடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியில் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பது இலக்கியத்தின் மூலமாகவும், தொல்பொருள் ஆராய்ச்சிகளின் மூலமும் தெரிகிறது. பட்டினப்பாலை இலக்கியங்கள், தமிழகத்தில் துறைமுகங்கள் பற்றியும் அதில் வெளிநாட்டு பொருட்கள் நம் நாட்டிற்கு வந்து இறங்கியது பற்றியும் விரிவாக எடுத்துரைக்கின்றன.

**சான்றுகள்**

1. பிளினி, தாலமி குறிப்புகளிலும் பெரிபுளூஸ்யிலும் இதற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன.
2. கொற்கை, புகார், அரிக்கமேடு முதலிய சங்ககால துறைமுகங்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் இதை உறுதிப்படுத்துகின்றன.
3. உரோமானிய நாணயங்களும், சீனக் காசுகளும் தமிழகத்தில் புகழ்வாய்ந்த இடங்களில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது ஏற்றுமதி, இறக்குமதி நடைபெற்றதற்கான சான்றுகள் ஆகும்.

### அயல் நாட்டு வாணிகம் - தரைவழி

அயல்நாடுகளுக்கு வாணிகம் செய்தோர் கழுதைகள், எருதுகள், மாட்டு வண்டிகள் மூலம் பொருட்களை ஏற்றிக்கொண்டு கூட்டம், கூட்டமாக பாலை நிலங்களைக் கடந்து சென்றனர். அப்போது அவர்களை கொள்ளையர்கள் தாக்கி பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர். அவர்களை அடித்து விரட்டுவதற்காக வாணிகச் சாத்தர் தங்களோடு வில் வீரர்களையும் உடன் அழைத்துச் சென்றனர். தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதுமே அக்காலத்தில் வாணிகச் சாத்தை

வேடர்கள் கொள்ளை அடித்ததை சங்ககால நூல்கள் கூறுகின்றன. இதைக் கீழ்க்கண்ட அகநானூற்று பாடல் தெளிவுபடுத்துகிறது.

**சான்று**

*"மழைபெயல் மறந்த கழைதிரங்கு இயவில்*
*செல் சாத்து எறியும் பண்பில் வாழ்க்கை*
*வல்வில் இளையர்"* (அகம், 245:5-7)

வாணிகச் சாத்துடன் பாலை நிலத்து மறவர் செய்தப்போரை மாங்குடி மருதனாரும் அகநானூற்றுப் பாடலில் கூறியிருக்கிறார். (அகம். 89:9-14).

## அயல்நாட்டு வாணிகம் - கடல் வழி

தமிழகம் மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டுள்ளது. எனவே கடல் வாணிகம் ஏற்றம் பெற இந்த அமைப்பு ஒத்துழைக்கின்றது.

சங்க கால தமிழர்கள் ரோமர்களுடன் கடல் கடந்த வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். தமிழகத்திலிருந்து எகிப்திற்கு பருவக்காற்றின் துணையோடு செல்வதற்கான நேரடி கடல் வழி கண்டுபிடித்த பின் இவ்வாணிகம் மேலும் சிறப்பாக நடக்கத் துவங்கியது. கி.பி. 3ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்கள் முதன் முதலில் தமிழகத்துடன் வர்த்தகம் மேற்கொண்டனர். மக்கள் குடியிருந்த குடிசைகளுக்கு 'குரம்பை' என்று பெயர். மாடி வீடுகளுக்கு **'வேயா மாடங்கள்'** என்று பெயர். அரண்மனையைச் சுற்றி ஒரு வெற்று வெளி இருக்கும் அதற்கு **'செண்டு வெடி'** என்று பெயர்.

## சங்ககால ஏற்றுமதி

சங்ககாலத்தில் தமிழகத்திலிருந்து மிளகு, கிராம்பு, ஏலக்காய், இஞ்சி, சந்தனம், மலர்கள், வாசனை திரவியம், அகில், தந்தம், முத்து, பவளம், மூலிகைச் செடிகள், வாழைப்பழம், அரிசி, உயர்ந்த ஆடைகள் மற்றும் மஸ்லின் துணி வகைகள் போன்ற பொருட்கள் கிரேக்க - ரோமானிய நாடுகளுக்கு கடல் வழியே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

## சங்ககால இறக்குமதி

பட்டாடைகள், பலவகை இயந்திரப் பொறிகள், கண்ணாடிப் பொருட்கள், இனிக்கும் மது வகைகள், தங்க நாணயங்கள் மற்றும் அணிகலன்கள், செம்பு, பவளம் போன்ற பொருட்கள் மற்றும் குதிரைகளும் இறக்குமதி செய்யப்பட்டன.

### சான்றுகள்

1. காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, தொண்டி, முசிறி போன்ற துறைமுகங்களில் அயல் நாட்டுக் கப்பல்கள் வந்தன, சென்றன என்பது பற்றி சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.

2. ஏற்றுமதி, இறக்குமதி சங்ககாலத்தில் தமிழகத்தில் நடைபெற்றது என்பதை பிளினி, தாலமி, பெரிபுளூஸ் போன்றவர்களின் நூல்களாலும், சங்க நூல்களாலும் அறிய முடிகிறது.

## நாவாய்களில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

மரக்கலங்களாகிய நாவாய்களில் உள்நாட்டு சரக்குகளை ஏற்றிக்கொண்டு போய் வெளிநாடுகளில் விற்று, அங்கிருந்து பொருட்களை ஏற்றிக்கொண்டு இங்கு வந்தார்கள். நாவாய்களை கடலோரமாக செலுத்தி கடற்கரை கிராமங்களில் ஏற்றுமதி, இறக்குமதி செய்த குறிப்பு சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது.

சங்க கால தமிழர்கள் கடலில் பிரயாணம் செய்யும்போது தங்களுடன் மகளிரை அழைத்துக் கொண்டு செல்லக்கூடாது என்ற கொள்கையைக் கொண்டிருந்தார்கள்.

மகளிர் கடலில் பிரயாணம் செய்யக் கூடாது என்னும் கொள்கை நெடுங்காலமாக தமிழர்களிடத்தில் இருந்தது என்பதை கீழ்காணும் அகத்திணையில் காணலாம்.

சான்று

"முந்நீர் வழக்கம் மகுடு உவோடு இல்லை" (அகத்திணை)

## ஏற்றுமதி இறக்குமதியில் தொடர்புடைய நாடுகள்

சங்ககாலத்தில் எகிப்து, சுமேரியா, பாபிலோனியா, பாலஸ்தீனம், அரேபியா, கிழக்கிந்திய தீவுகள், தென்கிழக்கு ஆசிய நாடுகள், பர்மா, ஈழம், சீனம், கிரேக்கம், ரோமபுரி ஆகிய நாடுகள் தமிழகத்துடன் நெருங்கிய வணிக தொடர்பு கொண்டிருந்தது என்று கூறலாம்.

### கப்பல்களை செப்பனிடும் பணி

புகார் முதலிய துறைமுகங்களில் கப்பல்களைச் செப்பனிடும் பணி நடைபெற்றதை பட்டினப்பாலை வாயிலாக அறிகிறோம். பல்வேறு அழகிய வண்ணக் கொடிகள், கப்பல் கொடி மரங்களை அலங்கரித்தன. துறைமுகங்களில் இறக்குமதியான சரக்குகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு கிடங்குகள் இருந்தன.

முக்கியமான துறைமுகங்களில் கலங்கரை விளக்கங்கள் கட்டப்பட்டிருந்தன. இதனைக் 'கலங்கரை இலங்கு சுடர்' எனச் சங்கப் பாடல்கள் குறிக்கின்றன.

## 4.7 கடல் கடந்த நாடுகளில் சோழர்களின் வெற்றி

### ராஜராஜ சோழன்

சோழப் பேரரசின் தலைசிறந்த மன்னராக முதலாம் ராஜராஜன் போற்றப்பட்டான். தனது தலைநகரான தஞ்சாவூரில் உலகமே வியக்கும் வகையில் தஞ்சை பெரிய கோவிலை மிகக் குறுகிய காலத்தில் கட்டி முடித்து திறமையான உள்ளூர் நிர்வாகத்தால் பெரும் பெயர் பெற்றான்.

### ராஜேந்திர சோழன்

தந்தை ராஜராஜனுக்கு இணையாக உலகமே போற்றும் மகனாக திகழ்ந்தவர் முதலாம் ராஜேந்திர சோழன். இவரை பூம்புகார் தலைவன்,

செங்கோல் வளவன், கங்கைகொண்டான், கடாரம் கொண்டான் என்னும் பல பட்டப் பெயர்களால் அழைக்கப்பட்டான். தந்தை இராஜராஜசோழனின் வலது கரமாக விளங்கிய இவர் 1012 ஆம் ஆண்டு சோழ சாம்ராஜ்யத்தின் மன்னராக முடி சூட்டப்பட்டார்.

### கங்கைகொண்ட சோழபுரம்

இரண்டு ஆண்டுகள் தந்தையிடம் ஆட்சி நிர்வாகத்தை கற்றுக்கொண்ட ராஜேந்திர சோழன் செழிப்புமிக்க தஞ்சையை விடுத்து, வறண்ட நிலப் பகுதியான கங்கைகொண்ட சோழபுரத்தில் தன் தலைநகரை உருவாக்கினார். வெற்றி நகரமாக கங்கைகொண்ட சோழபுரத்தை உருவாக்கி, எழிலார்ந்த சிவன் கோவில் ஒன்றையும், 'சோழ கங்கம்' என்ற ஏரியையும் இந்நகரில் உருவாக்கினார்.

### பராந்தக சோழன்

சோழர்கள் வலுவான கப்பற்படையைப் பெற்றிருந்தனர். பராந்தகச் சோழன் கடல் கடந்து சென்று இலங்கை மன்னனை வென்று "சிங்களாந்தகன்" என்னும் சிறப்பு பெயரை பெற்றான்.

பாண்டிய மன்னர்களுடைய அரச முடியும், வாளும் தர இலங்கை மன்னன் மறுத்ததால் பராந்தக மன்னன் மீண்டும் ஈழத்தின் மீது போர் தொடுத்து வெற்றி கண்டான்.

சுந்தரசோழன் கி.பி. 965-ல் மீண்டும் ஈழ நாட்டின் மீது படையெடுத்து சென்றான். போரில் சோழ மன்னன் வெற்றி பெறவில்லை. ஈழ மன்னனுடன் சமாதானம் செய்து கொண்டான்.

## 4.7.1 இராஜராஜ சோழனின் கப்பற்படை

சோழ மன்னர்களில் தலை சிறந்து விளங்கிய ராஜராஜ சோழன் தனது கடல் ஆதிக்கத்தை விரிவுபடுத்திக் கப்பற்படையை வலிமை மிக்கதாக அமைத்தான். காந்தளூர் சாலையின் அருகில் நடைபெற்ற போரில் சோழ மன்னனுடைய கப்பற்படை வென்று தனது கடல் ஆதிக்கத்திற்கு அஸ்திவாரமிட்டான்.

இராஜராஜன் அரபிக் கடலில் இருந்து முந்நீர்ப் பழந்தீவு, பன்னீராயிரம் தீவுகளைக் கைப்பற்ற வேண்டி தனது கப்பற்படையுடன் சென்று வெற்றி பெற்றான். சுந்தர சோழன் இலங்கையிடம் தோற்றத்தை மீண்டும் இராஜராஜ சோழன் மீட்டெடுத்தான்.

## 4.7.2 இராஜேந்திர சோழனின் கப்பற்படை

கடல் கடந்தும், கங்கை வரையும் சென்று வெற்றி கண்ட ஒரே தமிழ் மன்னன் ராஜேந்திர சோழன் மட்டுமே. சோழ மன்னர்களில் தனிச்சிறப்பு வாய்ந்தவன் ராஜேந்திர சோழன். அவன் அலை கடல் நடுவில் படைக்கலம் நடத்தி, பல நாடுகளை வெற்றி பெற்றான். அவன் போர்த்திறம் கண்டு நார்வே, ஜப்பான் போன்ற நாட்டு மன்னர்கள், அவர்களின் வெற்றி சின்னங்களை ராஜேந்திர சோழனுக்கே வழங்கினர்.

### இராஜேந்திர சோழனின் கங்கை வரை கண்ட வெற்றி

ராஜேந்திர சோழன் கடல் கடந்து சோழர் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்பாக, ஆட்சிப் பொறுப்பேற்ற சில ஆண்டுகளில், சோழப் படைகளுக்கு தலைமையேற்று தமிழகத்தின் வட பகுதியிலிருந்த அரசுகள் மீது படையெடுத்தான்.

i) முதலில் கர்நாடக பகுதியிலிருந்த இரட்டப்பாடி, வனவாசி, கொள்ளிப் பாக்கை, மனியக்கடகம் ஆகிய பகுதிகளை வென்று சோழரின் மேலாண்மையை ஏற்கச் செய்தார்.

ii) ஆந்திர பகுதியின் துங்கபத்திரை நதிக்கும், கிருஷ்ணா நதிக்கும் இடைப்பட்ட இடை துறை நாட்டை கைப்பற்றினார்.

iii) சாளுக்கியப் படைகளை தோற்கடித்து முன்னேறி இந்தியாவின் கிழக்குப் பகுதியில் இருந்த ஒட்டரதேசம், கோசல நாடு, தண்டபுக்தி ஆகிய நாட்டு அரசை அடிபணியச் செய்தான்.

iv) வங்காள நாட்டை ஆட்சி செய்த கோவிந்த சந்தன் என்ற மன்னன், சோழரின் ஆதிக்கத்திற்கு

v) கடைசியாக உத்தர லாடத்தை ஆட்சி செய்த மகிபாலனை வென்று சோழர் படைகள் கங்கையை அடைந்தது.

தோல்வி கண்ட மன்னர்களை கங்கை நீரை கொணரச் செய்து அந்நீரினைக் கொண்டு சோழ சாம்ராஜ்ஜியத்தைப் புனிதமடையச் செய்தார் ராஜேந்திர சோழன்.

## 4.7.3 இராஜேந்திர சோழனின் கடல் கடந்த வெற்றி

உலகின் முதல் கடற்படையை தோற்றுவித்த பெருமை ராஜேந்திர சோழனைச் சாரும். தனது தந்தை ராஜராஜன் காலத்தில் இலங்கை தோற்கடிக்கப்பட்டிருப்பினும், ஐந்தாம் மகிந்தன், சோழரின் ஆதிக்கத்திற்கு எதிராக படைகளை திரட்டியதை அறிந்த ராஜேந்திர சோழன் அவனை வீழ்த்த இலங்கைக்கு தனது கடற்படையை அனுப்பினான். ஐந்தாம் மகிந்தன் சோழரின் படைகளைக் கண்டு பயந்து காட்டில் ஒளிந்து கொண்டார். இலங்கையை வென்று பாண்டியர்களுடைய சுந்தர முடியையும், இந்திரன் ஆரத்தையும், வாளையும் இம்மன்னன் கைப்பற்றினார்.

போர் யானைகளையும் ஏற்றிச்செல்லும் அளவிற்கு கப்பல்கள் சோழர் கடற்படையில் இருந்தன என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. பெரிய கப்பல்களுக்கு 'சங்கரா' என்றும் 'சோழந்தி' என்றும் பெயரிடப்பட்டிருந்தன.

## 4.7.4 கடல் கடந்து 13 நாடுகளை வென்ற ராஜேந்திர சோழன்

கடல் கடந்து கடாரம் வரைக்கும் சென்று தான் ராஜேந்திர சோழன் வெற்றி கொண்டான் எனக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் 13 நாடுகளை வெற்றி கொண்டு சீனா வரை சென்றான் என்பது தான் உண்மை.

ஸ்ரீ விஜயத்தை தலைநகராகக் கொண்டு கடாரத்தை ஆட்சி புரிந்து வந்த மன்னன் சங்கராம விஜய துங்க வர்மனுக்கும், சோழர்களுக்கும்

வியாபார சம்பந்தமான உறவில் விரிசல் வர, ராஜேந்திர சோழன் அந்த நாட்டை கைப்பற்ற தன் கடற்படையை சோழத்துறைமுகத்திலிருந்து கடாரம் நோக்கி செலுத்துகிறான். கடாரம் ஒரு முக்கியத்துறைமுகம், சிறந்த வணிக தலம், இதை முதலில் கைப்பற்றுகிறார்கள். பிறகு இதன் தலைநகர் ஸ்ரீ விஜயம் சென்று, அரசனை தோற்கடித்து அந்த நாட்டை கைப்பற்றியதுடன் அதனைச் சுற்றியுள்ள 11 நகரங்களையும், துறைமுகங்களையும், தீவுகளையும், கைப்பற்றுகிறார்கள்.

### வென்ற 13 நாடுகள்

1. கடாரம்
2. ஸ்ரீ விஜயம்
3. துறைநீர்ப்பண்ணை
4. மலையூர் (மலேயா)
5. மாயிருடிங்கம் (மலேயாவின் நடுப்பகுதி)
6. இலங்காசோகம்
7. மாப்பப்பாளம் (பர்மா)
8. மேவிலிம்பங்கம்
9. வளைப்பந்தூர் (கம்போடியா)
10. தக்கோலம்
11. மாதமாலிங்கம்
12. லீலாமுரிதேசம்
13. மானக்க வாரம் (நிக்கோபார்)

ஆகிய பகுதிகளை சோழர் கடற்படை கைப்பற்றியது.

## 4.7.5 கடாரம் கொண்டான்

ராஜேந்திர சோழன் கடல் கடந்து கப்பற்படை கொண்டு மேற்குறிப்பிட்ட அனைத்து நாடுகளிலும் சோழப்பேரரசை நிலை நிறுத்தி அம் மன்னர்களுடன் நட்புறவுடன் நடந்து கொண்டது அவனது ஆட்சி நிர்வாகத் திறமையை எடுத்து இயம்புகிறது.

கடல் கடந்து வெற்றி பெற்ற நாடுகளில் நேரடியாக ஆட்சி செய்வது என்பது இயலாத காரியம் என நன்கு அறிந்த ராஜேந்திர சோழன், அந்நாட்டு மன்னர்களை அடிபணியச் செய்து ஆட்சியை அவர்களிடமே ஒப்படைத்தார். அதனால்தான் இவனை 'கடாரம் கொண்டான்' என போற்றப்படுகிறான்.

### கடாரம் (அ) காழகம் நகரின் சிறப்பு

தமிழர்கள் முதன் முதலில் வணிகர்களாகவும், வேலைக்காகவும் குடியேறிய பகுதி கடாரமாகும். கடாரம் என்பதை சங்க இலக்கியத்தில் காழகம் என அழைக்கப்பட்டது. இத்துறைமுக நகரில் தாது பொருட்கள் அதிக அளவில் கிடைத்தன. இங்கு தமிழர்கள் இரும்பையும், பொன்னையும் வெட்டி கருவிகளை உருவாக்கும் கலையை நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் செல்லும் கப்பல் இத்துறைமுகம் வழியாகவே சென்று வந்தன. 11-ஆம் நூற்றாண்டில் சீனர்களின் அச்சுறுத்தல்கள் அதிகமாயின. ஸ்ரீ விஜயத்தை ஆண்ட அரசர்களும் சீன அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதை அடக்க ராஜேந்திர சோழன் தனது கப்பற்படையை அனுப்பி இவர்களை அடக்கி அடிபணியச் செய்து தமிழர்களுக்கு ஆதரவு நல்கினார்.

## 4.7.6 மூன்றாம் குலோத்துங்கன்

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சேர நாடு, பாண்டிய நாடு, கொங்கு நாடு, சுங்க நாடு, தெலுங்கு நாடு போன்ற புற நாடுகள் எல்லாம்

சோழ ராஜ்ஜியத்திற்கு உட்பட்டிருந்தன. சோழப் பெருவேந்தர்களுள் ஒருவனாக வைத்துப் பாராட்டத்தக்க குணங்கள் படைத்த பெருவீரன் மூன்றாம் குலோத்துங்கன் அனைவராலும் பாராட்டப்பட்டான். இவனுக்கு பிறகு வந்த சோழ அரசர்கள் சரிவர ஆட்சி செய்யாததால் சோழ சாமராஜ்யம் சரியத் தொடங்கியது.

## 4.8 பயிற்சி வினாக்கள்

### பகுதி - ஆ

1. தமிழகத்தின் முக்கிய தாவரங்கள் பற்றி விரிவாக எழுதுக.
2. சங்ககாலத்தில் தாவரங்களை தெய்வமாகவும், வசிப்பிடம், நிலம், இசை மற்றும் நேரம் இவைகளுக்கு தாவரங்களின் பெயர் வைத்த விதங்களை விளக்குக.
3. சங்ககாலத்தில் தமிழர்கள் விலங்குகளை பயன்படுத்திய விதங்களைப் பற்றி எழுதுக.
4. சங்க இலக்கிய அகக் கோட்பாட்டினைத் தெளிவுப்படுத்துக. (A.U.Nov./Dec. 2022)
5. ஐந்திணைகள் குறித்து எழுதுக. (A.U. (CEG) March 2023)
6. அகத்திணையின் வகைகளை விளக்குக.
7. புறத்திணைகளின் வழியே அறியலாகும் தமிழர் போர் மரபினைப் பற்றி எழுதுக. (A.U. (CEG) March 2023)
8. அன்பின் ஐந்திணைகளும் அவற்றின் முப்பொருட்களும் பட்டியலிடுக.
9. பல்வேறு செயல்களில் தமிழர்கள் அறத்தைப் பின்பற்றினார்கள் என்பதை சான்றுகளுடன் விளக்குக.
10. சங்ககாலத்தில் எழுதுதலின் வளர்ச்சியை பற்றி விரிவாக எழுதவும்.

11. சங்ககாலத்தின் முக்கிய நகரங்கள் குறித்து எழுதுக. (A.U. (CEG) March 2023)

12. சங்ககாலத்தின் முக்கிய துறைமுகங்கள் பற்றியும், அதில் நடந்த ஏற்றுமதி, இறக்குமதியையும் விளக்குக.

13. சங்ககாலத்தில் நடைபெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வணிகங்களை விளக்குக. (A.U. Nov./Dec. 2022)

4. ராஜேந்திர சோழனின் கடல்கடந்த வெற்றிகளைப் பற்றி எழுதுக.